# ஆசிரம பஜனாவளி



T11511
R003108

அகில பாரத சர்க்கா சங்கம், திருப்பூர்.

கதர் மலர் பிரசுரம்—19

# காந்தி
# ஆசிரம பஜனாவளி

மகாத்மாஜியின் பிரார்த்தனைத் தத்துவ
விளக்கங்களுடன்.

அமரர். ப. சுப்ரமணியன், I.A.S
(முன்னாள் இந்து அறநிலையத் துறை ஆணையர்)
அவர்களின் நினைவாக அன்பளிப்பு,
அளிப்பவர்:
திரு. எஸ். ராஜேந்திரன், B.E.
இராஜப்பா நகர், தஞ்சாவூர்.

அகில பாரத சர்க்கா சங்கம்
தமிழ் நாட்டுக் கிளை,
திருப்பூர்.

முதற் பதிப்பு
அக்டோபர் '48.
2-ம் பதிப்பு
ஜனவரி '49.

விலை ரூ. 0-8-0

கபீர் அச்சுக்கூடம்
சென்னை, 5.

# குறிப்பு

மூன்று மாதங்களுக்கு முன் 'காந்தி ஆசிரம பஜனை' என்ற சிறு நூல் ஒன்று வெளியிட்டிருந்தோம். அதன் பிரதிகளெல்லாம் வெகு விரைவில் செலவழிந்து விடவே அதன் திருந்திய பெருக்கப்பட்ட 2-வது பதிப்பாக "காந்தி ஆசிரம பஜனாவளி" என்ற இப் புத்தகம் வெளி வருகிறது. 'ஆசிரம பஜனாவளி' யென்ற பிரசித்தமான நூலையே பெரிதும் தழுவி இது தயாரிக்கப்பட்டுள்ளது. காந்தியடிகள் நடத்தி வந்த காலை மாலைப் பிரார்த்தனைகளின் மந்திரங்களும் சுலோகங்களும் பாடல்களும் இதில் முக்கியமாக இடம் பெற்றிருக்கின்றன.

ஆச்ரம பஜனாவளியில் காணப்படும் பாடல்களுள் 'வைஷ்ணவ ஜனதோ' போன்ற பிரசித்தமான ஒரு சிலவற்றைத் தவிர இதிலுள்ள மற்ற பாடல்களெல்லாம் தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி, பாரதியார் ஆகியவற்றிலிருந்தே தொகுக்கப்பட்டவை. எம் வேண்டுகோளுக்கிணங்கி நண்பர்கள் கூறிய ஆலோசனைகளை இவற்றைத் தொகுப்பதில் கூடியவரை பின்பற்ற முயன்றிருக்கிறோம். இன்னும் பல பாடல்களை சேர்க்கமுடியாமற் போனதற்கு புஸ்தகத்தின் அளவு இடந் தாராததே காரணம். இந்த நண்பர்களுக்கும், பிரார்த்தனையின் தத்துவத்தை விளக்கும் மகாத்மாஜியின் கட்டுரை யொன்றையும் சொற்பொழி வொன்றையும் கொடுத்துதவிய நண்பருக்கும் எம் நன்றி.

தமிழ் நாட்டில் நடைபெறும் ஆசிரமங்கள், மாணவர் விடுதிகள், முகாம்கள், பள்ளிக்கூடங்கள் ஆகியவற்றின் தேவையைக் கருதி இதில் 'வித்யாலய மந்திரங்கள்,' 'கொடி வணக்கம்', 'நடைகீதம்' ஆகிய பகுதிகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

பிரசுரித்தோர்

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| காலைப் பிரார்த்தனை | ... | 1 |
| மாலைப் பிரார்த்தனை | ... | 26 |
| வித்யாலய மந்திரங்கள் | ... | 43 |
| பாசுரங்கள், பாடல்கள் | ... | 46 |
| வாழ்த்து | ... | 66 |
| நாமாவளி | ... | 67 |
| கொடி வணக்கம் | ... | 70 |
| நடைகீதம் | ... | 71 |


### மகாத்மாஜியின் விளக்கங்கள்.


| | | |
|---|---|---|
| I. பிரார்த்தனை | ... | 74 |
| II. பிரார்த்தனையின் அவசியம் | ... | 78 |
| III. பிரார்த்தனையின் விளக்கம் | ... | 83 |

# காந்தி

# ஆசிரம பஜனுவலி

## காலைப் பிரார்த்தனை

१. नम्यो हो रेंगे क्यो*
नम्यो हो रेंगे क्यो
नम्यो हो रेंगे क्यो

1. நம்யோ ஹோ ரேங்கே க்யோ
நம்யோ ஹோ ரேங்கே க்யோ
நம்யோ ஹோ ரேங்கே க்யோ

२. हरि ओम् ईशावास्यमिदं सर्वं यत्किंच जगत्यां जगत् ।
तेन त्यक्तेन भुञ्जीथा मा गृधः कस्यस्विद्धनम् ॥

2. ஹரிஓம் ஈசாவாஸ்யமிதம் ஸர்வம்
யத்கிஞ்ச ஜகத்யாம் ஜகத்.
தேன த்யக்தேன புஞ்ஜீதா
மாக்ருத: கஸ்ய ஸ்வித் தனம்.

உலகில் சலிப்பவை நிலைத்திருப்பவை ஆகிய எல்லாவற்றிலும் கடவுள் பரவியிருக்கிறார். அவர்

---

* ஜப்பானிய பௌத்த மத மந்திரம்

அளித்த நலங்களை நாம் நுகருகிறோம். ஆகையால் நமது நுகர்ச்சி யோகமும், வைராக்கியமும் பொருந்தி இருப்பதாக. பேராசைக்கு இங்கு இடமில்லை. யாருடைய பொருளை எவர் பெற ஆசைப்படுவது? நாம் பெறக்கூடிய செல்வமெல்லாம் தவத்தினாலும் தியாகத்தினாலுமே கிட்டவேண்டும்.

३. प्रातः स्मरामि हृदि संस्फुरदात्मतत्त्वम् ।
सच्चित्सुखं परमहंसगतिं तुरीयम् ।
यत् स्वप्नजागरसुषुप्तमवैति नित्यम्
तद् ब्रह्म निष्कलमहं न च भूतसंघः ॥

3. ப்ராத: ஸ்மராமி ஹ்ருதி ஸம்ஸ்புர தாத்ம தத்வம்
ஸச்சித் ஸுகம் பரம ஹம்ஸ கதிம் துரீயம். |
யத் ஸ்வப்ன ஜாகர ஸுஷுப்தம் அவைதி நித்யம்
தத் ப்ரம்ம நிஷ்கலம் அஹம் ந ச பூத ஸங்க: ||

எந்த ஆத்ம தத்துவம் எப்பொழுதும் உள்ளத்தில் எழுந்து இன்பமளித்துக் கொண்டிருக்கிறதோ, எது பரமஹம்ஸ மென்றும், பரேசமென்றும், ஸத் என்றும், சித் என்றும், எப்பொழுதும் முக்தி பெற்றதென்றும், ஒப்புவமை யற்றதென்றும் அழைக்கப்படுகிறதோ, எது கனவிலும் விழிப்பிலும், உறக்கத்திலும் ஒரே தன்மையதாய் கலக்கமற்றதாய் விழிப்புடனிருக்கிறதோ அந்த பிரம்மமே நான்; பஞ்ச பூதங்களாலாகிய உடல் நானல்ல.

४. प्रातर्भजामि मनसो वचसामगम्यम्
वाचो विभान्ति निखिला यदनुग्रहेण ।
यन्नेति नेति वचनैर्निगमा अवोचुः-
तं देवदेवमजमच्युतमाहुरग्र्यम् ॥

4. ப்ராதர் பஜாமி மனஸோ வசஸா மகம்யம்
வாசோ விபாந்தி நிகிலா யதனுக்ரஹேண |
யந்நேதி நேதி வசனை: நிகமா அவோசு:
தம் தேவ தேவம் அஜம் அச்யுதம் ஆஹுரக்ர்யம் ||

எவர் மனத்திற்கும், வாக்கிற்கும் எட்டாதவரோ, பிறப்பற்று தேவ தேவரென்று புகழ் பெற்றவரோ, எவருடைய அருளினால் எம் வாக்கு பூர்ண சக்தியுடன் விளங்குகிறதோ, எவரை 'நேதி, நேதி' யென்று வேதங்களெல்லாம் விளக்குகின்றனவோ, அந்த என்று மழியாத் தேவனை அல்லும் பகலும் மனத்திற் கொண்டு அவர் அடிகளில் வணங்குவோமாக.

५. प्रातर्नमामि तमसः परमर्कवर्णम् ।
पूर्णं सनातनपदं पुरुषोत्तमाख्यम् ।
यस्मिन्निदं जगदशेषमशेषमूर्तौ
रज्ज्वां भुजंगम इव प्रतिभासितं वै ॥

5. பிராதர் நமாமி தமஸ: பரமர்க்கவர்ணம்
பூர்ணம் ஸநாதன பதம் புருஷோத்த மாக்யம்
யஸ்மின் இதம் ஜகதஸேஷமஸேஷ மூர்த்தௌ
ரஜ்வாம் புஜங்கம இவ ப்ரதிபாஸிதம் வை.

எவர் பூர்ணரோ, புருஷோத்தமரோ, என்றுமிருப்பவரோ, தூயரோ, பேரொளி பொருந்தியவரோ, எவருடைய எல்லையற்ற சூரிய ஒளியினால் இருளெல்லாம் பட்டு மறைகிறதோ, பாம்பென்ற மயக்கத்தை உண்டாக்கும் கயிற்றைப் போன்ற இவ்வுலகமனைத்தும் எவரிடத்தில் அடங்கி நிற்கிறதோ, அந்த தேவரே நமக்குக் கதியென்று நாம் விடும் ஒவ்வொரு மூச்சிலும் நம்பி இடையறாது வணங்குவோமாக.

६. समुद्रवसने देवि पर्वतस्तनमण्डले ।
विष्णुपत्नि नमस्तुभ्यं पादस्पर्शं क्षमस्व मे ॥

6. ஸமுத்ர வஸனே தேவி பர்வதஸ்தன மண்டலே.
விஷ்ணுபத்னி நமஸ்துப்யம் பாதஸ்பர்ஶம் க்ஷமஸ்வ மே.

கடலை ஆடையாகவும், மலைகளை ஸ்தனங்களாகவும் கொண்டு விளங்கும் ஹே விஷ்ணுவின் பிராட்டியாரான பூதேவியே, உம்மீது காலால் நடந்து நான் செய்யும் அபசாரத்தை மன்னிப்பீராக.

७. या कुन्देन्दु तुषारहारधवला या शुभ्रवस्त्रावृता
या वीणावरदण्डमण्डितकरा या श्वेतपद्मासना ।
या ब्रह्माच्युतशंकरप्रभृतिभिर्देवैः सदा वन्दिता
सा मां पातु सरस्वती भगवती निःशेषजाड्यापहा ॥

7. யா குந்தேந்து துஷாரஹாரதவளா
யா சுப்ர வஸ்த்ராவ்ருதா
யா வீணவரதண்ட மண்டிதகரா
யா ச்வேத பத்மாஸனா |
யா ப்ரம்மாச்சுத சங்கர ப்ரப்ருதிபி:
தேவை: ஸதா வந்திதா,
ஸா மாம் பாது ஸரஸ்வதீ பகவதீ
நி: சேஷ ஜாட்யாபஹா ||

மதியையும், பனியையும் நிகர்த்தமல்லிகை மாலை யணிந்து வெள்ளைக் கலையுடுத்தி, வாத்தியங்களில் சிறந்த யாழைக் கையிலேந்தி வெள்ளைக்கமலத்தில் வீற்றிருப்பவளும் பிரம்மன், விஷ்ணு, ருத்திரன் முதலிய தேவர் அனைவராலும் என்றென்றும் வணங்கப் படுபவளுமான என் தாய் ஸரஸ்வதி, எனது அறி யாமையெல்லாம் அகற்றி என்னைக் காப்பாளாக.

௮. वक्रतुण्ड महाकाय सूर्यकोटिसमप्रभ ।
निर्विघ्नं कुरु मे देव शुभकार्येषु सर्वदा ॥

8. வக்ரதுண்ட மஹாகாய ஸூர்ய கோடி ஸமப்ரப |
நிர்விக்னம் குரு மே தேவ சுபகார்யேஷு ஸர்வதா ||

வளைந்த துதிக்கையும், பருத்த உடலும், கோடி சூர்யர்களை யொத்த ஒளியும்கொண்டு விளங்கும் ஹே

கணபதியே, நான் தொடங்கும் நற்செயல்களெல்லாம் எப்பொழுதும் தடையின்றி நிறைவேறுவதாக.*

९. गुरुर्ब्रह्मा गुरुर्विष्णुर्गुरुर्देवो महेश्वरः ।
गुरुः साक्षात् परब्रह्म तस्मै श्रीगुरवे नमः ॥

9. குருர்பிரம்மா, குருர்விஷ்ணு:
குருர்தேவோ மஹேச்வர: |

குருஸ்ஸாக்ஷாத் பரப்ரம்ம,
தஸ்மை ஸ்ரீ குரவே நம: ||

குருவே பிரம்மன், குருவே விஷ்ணு, மஹேச்வரனும் பரப் பிரம்மமும் குருவே. இத்தகைய குருவுக்கு எண்ணற்ற வணக்கங்கள்.

१०. शान्ताकारं भुजगशयनं पद्मनाभं सुरेशम्
विश्वाधारं गगनसदृशं मेघवर्णं शुभाङ्गम् ।
लक्ष्मीकान्तं कमलनयनं योगिभिर्ध्यानगम्यम्
वन्दे विष्णु भवभयहरं सर्वलोकैकनाथम् ॥

10. சாந்தா காரம் புஜக ஶயனம் பத்மநாபம் ஸுரேஶம்
விஶ்வாதாரம் ககனஸத்ருஶம் மேகவர்ணம் ஶுபாங்கம்
லக்ஷ்மீ காந்தம் கமலநயனம் யோகிபி: த்யானகம்யம்
வந்தேவிஷ்ணும் பவபயஹரம் ஸர்வ லோகைக நாதம்.

---

*மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

அமைதி நிலவும் உருவும், பாம்புப் பாயலும், நாபியில் தாமரையும் கொண்ட எந்த தேவ தேவன் உலகிற்கு ஆதாரமாய், வானத்தையும் மேகத்தையும் ஒத்த நிறமுள்ள அழகிய மேனியனுய், லக்ஷ்மீபதியாய், தாமரைக்கண்களொடு யோகிகளின் தியானத்தில் காட்சி யளிக்கிருனே, அந்த எல்லா உலகிற்கும் ஏக நாயகனுய் உலகபய மனைத்தையும் போக்கும் விஷ்ணுவை வணங்குகிறேன்.

११. करचरणकृतं वाक्कायजं कर्मजं वा
श्रवणनयनजं वा मानसं वाऽपराधम् ।
विहितमविहितं वा सर्वमेतत् क्षमस्व
जय जय करुणाब्धे श्रीमहादेव शम्भो ॥

11. கரசரண க்ருதம் வாக்காயஜம் கர்மஜம் வா
ஶ்ரவண நயனஜம்வா மானஸம்வா அபராதம் |
விஹிதம் அவிஹிதம் வா ஸர்வம் ஏதத் க்ஷமஸ்வ
ஜயஜய கருணப்தே ஸ்ரீ மஹா தேவ ஶம்போ ||

கை கால்களினுலோ, வாய் உடலினுலோ, செயலினுலோ, காது, கண், மனம் ஆகியவைகளினுலோ தெரிந்தோ, தெரியாமலோ யான் செய்த பாவமனைத்தையும் கருணைக் கடலான ஸ்ரீ மஹாதேவனே, சம்புவே, உன்னைப் பன்முறை போற்றுவேன், மன்னிப்பாயாக.

१२. न त्वहं कामये राज्यं न स्वर्गं नापुनर्भवम् ।
कामये दुःखतप्तानां प्राणिनामार्तिनाशनम् ।

12. ந த்வஹம் காமயே ராஜ்யம்
ந ஸ்வர்க்கம் நாபுனர்பவம் |
காமயே துக்க தப்தானும்
பிராணினும் ஆர்த்தி நாஶனம் ||

*மண்ணரசும் வேண்டேன், விண்ணெடு வேண்டேன் மோக்ஷம்; துக்கத் தீயில் வாடும் மக்களின் துயரைப் போக்குவதையே விரும்புவேன்.*

१३. स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां
न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यः शुभमस्तु नित्यम्
लोकाः समस्ताः सुखिनो भवन्तु ॥

13. ஸ்வஸ்தி: பிரஜாப்ய: பரிபாலயந்தாம்
நியாய்யேன மார்கேண மஹீம் மஹீசா: |
கோ பிராம்மணேப்ய: ஶுபமஸ்து நித்யம்
லோகா: ஸமஸ்தா: ஸுகினே பவந்து ||

*அரசர் நீதி தவருமல் தம் குடிகள் மீது ஆக்ஷி நடத்தி வருவாரா்க. நீதி வழியே செல்வதனுல் வீடுகளிலெல்லாம் சீரும் செல்வமும் கொழித்து விளங்*

குக. ஆவினங்களும் பிராம்மணர்களும் சுகமும், அமைதியும் பெற்று செழித்து வாழ்க. உலகமனைத்தும் சுகம் பெற்று ஓங்குக. *

१४. नमस्ते सते जगत्कारणाय
नमस्ते चिते सर्वलोकाश्रयाय ।
नमोऽद्वैततत्त्वाय मुक्तिप्रदाय
नमो ब्रह्मणे व्यापिने शाश्वताय ॥

14. நமஸ்தே ஸதே தே ஜகத்காரணாய
நமஸ்தே சிதேதே ஸர்வ லோகாஶ்ரயாய |
நமோஅத்வைத தத்வாய முக்தி ப்ரதாய
நமோ ப்ரம்மணே வியாபினே ஶாஶ்வதாய. ||

உலகத்திற்குக் காரணமாயுள்ள சத்திற்கு வணக்கம். உலகமனைத்தையும் காத்தருளும் சித்ரூபியான கடவுளுக்கு வணக்கம். அத்வைத ரூபியும் என்றென்றும் நிலைத்திருப்பவரும், முக்தி அளிப்பவரும் எங்கும் உள்ளவருமான பரப்ரம்மத்திற்கு வணக்கம்.

---

*வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

१५, त्वमेकं शरण्यं त्वमेकं वरेण्यं
त्वमेकं जगत्पालकं स्वप्रकाशम् ।
त्वमेकं जगत्कर्तृपातृप्रहर्तृ
त्वमेकं परं निश्चलं निर्विकल्पम् ॥

15. த்வமேகம் ஶரண்யம் த்வமேகம் வரேண்யம்
த்வமேகம் ஜகத் பாலகம் ஸ்வப்ரகாஶம் |
த்வமேகம் ஜகத் கர்த்ரு பாத்ரு ப்ரஹர்த்ரு
த்வமேகம் பரம் நிஶ்சலம் நிர்விகல்பம் ||

நீயே கதியற்றவர்களுக் கெல்லாம் அடைக்கலம். நீயே எல்லோரிலும் தலை சிறந்தவன், ஒளிமயன். நீயே உலகை ஆக்கி, காத்து, அழிப்பவன். நீயே அப்பாலுக்கப்பாலிருந்து என்றும் அசையாது, மாறு திருப்பவன்.

१६. भयानां भयं भीषणं भीषणानाम्
गतिः प्राणिनां पावनं पावनानाम् ।
महोच्चैः पदानां नियन्तृत्वमेकम्
परेषां परं रक्षणं रक्षणानाम् ॥

16. பயானாம் பயம் பீஷணம் பீஷணானாம்
கதி:ப்ராணினாம் பாவனம் பாவனானாம் |
மஹோச்சை: பதானாம் நியந்த்ருத்வ மேகம்
பரேஷாம் பரம் ரக்ஷணம் ரக்ஷணானாம் ||

நீ பயங்களுக் கெல்லாம் பயம் தருபவன். கொடியோருக்கெல்லாம் கொடுமை விளைப்பவன். உயிர்களுக்கு வழி நீயே. தூயோரிடையே விளங்கும் தூய்மை நீயே. மிகமிக உயர்ந்த பதவிகளை நியமித்து நடத்துவோன் நீயே. பெரியோரில் பெரியோனும், காவலரைக் காப்போனும் நீயே.

१७. वयं त्वां स्मरामो वयं त्वां भजामो
वयं त्वां जगत्साक्षिरूपं नमामः ।
सदेकं निधानं निरालंबमीशम्
भवाम्भोधिपोतं शरण्यं व्रजामः ॥

17. வயம் த்வாம் ஸ்மராமோ வயம் த்வாம் பஜாமோ
வயம் த்வாம் ஜகத்ஸாக்ஷி ரூபம் நமாம: |
ஸதேகம் நிதானம் நிராலம்ப மீஶம்
பவாம்போதி போதம் ஶரண்யம் வ்ரஜாம: ||

தினமும் உன்னையே நினைந்து உன் புகழையே பாடுகிறோம். ஏ உலகின் சாக்ஷியாயிருப்பவனே, உன் பாத கமலங்களில் பணிகிறோம். நீயே ஆதாரமின்றி நிலைத்தவன், சித் உருவினன், சிருஷ்டி அனைத்திற்கும் இருப்பிடம்; துக்கமயமான சம்சார சாகரத்தில் ஆழ்ந்து தவிக்கும் மனிதனை, கரையேற்றும் புணை நீயே.

१८. अहिंसा सत्य अस्तेय ब्रह्मचर्य असंग्रह
शरीरश्रम अस्वाद सर्वत्र भयवर्जन ।
सर्वधर्मी समानत्व स्वदेशी स्पर्शभावना
हीं एकदाश सेवावीं नम्रत्वें व्रत निश्चये ॥

18. அஹிம்ஸா ஸத்ய அஸ்தேய ப்ரம்மசர்ய அஸங்க்ரஹ
ஶரீரஶ்ரம அஸ்வாத ஸர்வத்ர பயவர்ஜன |
ஸர்வதர்மீ ஸமானத்வ ஸ்வதேஶீ ஸ்பர்ஶ பாவனு
ஹீம் ஏகாதச ஸேவாவீம் நம்ரத்வே வ்ரத நிச்சயே ||

கொல்லாமை, உண்மை, கள்ளாமை, பிரம்ம சரியம், வெளவாமை, உடலுழைப்பு, நாவடக்கம், அஞ்சாமை, சர்வ சமய சமரஸம், சுதேசி, தீண் டாமை அகற்றல் என்ற இப்பதினெரு விரதங்களை அடக்கமாக உறுதியொடு செய்தல் வேண்டும்.

१९. मूकं करोति वाचालं पंगुम् लंघयते गिरिम् ।
यत्कृपा तमहम् वन्दे परमानन्दमाधवम् ॥

19. மூகம் கரோதி வாசாலம் பங்கும் லங்கயதே கிரிம் |
யத்க்ருபா தமஹம் வந்தே பரமாநந்த மாதவம் ||

எந்தப் பேரானந்தவாரிதியான மாதவனுடைய கருணையினால் ஊமைக்குப் பேசவும் முடவனுக்கு மலையைத் தாண்டவும் சக்தி வருமோ அவனை வணங்குகிறேன்.

## 20 கீதை பாராயணம்*

२१. विपदोनैव विपदः संपदोनैव संपदः ।
विपद्विस्मरणं विष्णोः सम्पन्नारायणस्मृतिः ॥

21. விபதோ நைவ விபத:
ஸம்பதோ நைவ ஸம்பத: |
விபத் விஸ்மரணம் விஷ்ணோ:
ஸம்பந் நாராயண ஸ்ம்ருதி: ||

கடவுளை மறப்பதைப் போல் பேராபத்தும் ஆண்டவனை என்றும் நினைவில் இருத்துவதைப் போன்ற பெருஞ் செல்வமும் வேறில்லை.

२२. आऊज़ो बिल्लाहे भिनश्शैत्वा निर्रजीम ।*
बिस्मिल्ला हिर्रहमा निर्रहीम ।

---

*ஒரு வாரத்திற்குள் கீழ்க்கண்ட முறையில் கீதை முழுமையும் ஓதப்படும்.

| | | |
|---|---|---|
| வெள்ளி | 1, 2 | அத்தியாயங்கள் |
| சனி | 3, 4, 5 | ,, |
| ஞாயிறு | 6, 7, 8 | ,, |
| திங்கள் | 9, 10, 11, 12 | ,, |
| செவ்வாய் | 13, 14, 15 | ,, |
| புதன் | 16, 17 | ,, |
| வியாழன் | 18 | ,, |

---

* இஸ்லாம் மதப் பிரார்த்தனை

अल् ह्म्दो लिल्लाहे रब्बिल् आलमीन, अर्रेह्मा निर्रेह़ीम मालेकेयव्मिद्दीन, ईयाका न्आबुदो वईयाकानस्तईन, एहदेनस्सिरात्वल् मुस्तक़ीम, सिरात्वल्लज़ीना अन् अ़म्ता अ़लयाहिम्, गय़रिल् मग़दूबे अ़लम्हिम् बलद्द्वाल्लीन।
बिस्मिल्ला हिर्रेह्मा निर्रेहीम। आमीन।
कुल्हो वल्लाहो अहद्, अल्लाहुस्समद्,
लम्यलिद् वलम्यूलद्, वलम यकुँल्लहु कोफ़ोवन् अहद्।

**22.** ஆஉஜோ பில்லாஹே பினஶ்ஶை த்வா நிர்ரஜீம்
பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா நிர்ரஹீம் |

அல்ஹம் தோ லில்லாஹே ரப்பில்
ஆலமீன் அர்ரஹ்மா நிர்ரஹீம்
மாலே கேய’வ மித்தீன் ஈயாகா
நூஆபுதோ வயீயா காநஸ்த யீன்,
யேஹதே நஸ்ஸிராத்வல் முஸ்தகீம்
ஸிராத்வல் லஜீன அன் அம்தா
அல் யஹீம் கயிரில் மக்தூபே
அலம்ஹிம் வலத் த்வால் லீன், ஆமின்
பிஸ் மில்லா ஹிர் ரஹ்மா நிர் ரஹீம் |

குல்ஹோ வல்லாஹோ அஹத்
அல்லாஹுஸ் ஸமத்,
லம்பலித் வலம்யூலத், வலம்
யகுல்லஹு கோபோவன் அஹத் |

பாபாத்மாவான சைத்தானிட மிருந்து ரஹீம் காப்பாராக. பிஸ்மில்லா ஹிர் ரஹ்மானே, கருணைக் கடலான கடவுள். ஆண்டவனே, போற்றி, நீயே சிருஷ்டிகர்த்தா, நீயே தலைவன், நீயே ஆண்டவன். நீயே உலகைக் காப்பவன் | நீயே கருணை யளிப்ப வன், அனைவரின் உண்மையையும் அறிபவன். நல் லவை தீயவை ஆகிய எல்லாக் கருமங்களுக்கும் இறுதி யில் நீதி வழங்குபவன் நீயே | இந்த வழிபாடெல்லாம் உனக்காகவே நடத்துகிறோம். நாங்கள் அனைவரும் உன்னிடமே உதவி வேண்டுகிறோம் ; என்றென்றும் வேண்டுவோம் | எவர் மீது உன் கடைக்கண் செல் கிறதோ, அவர்கள் செல்லும் வழியே வழி. உன் கருணையைப் பெறாது தவறியவர்களுடைய போக்கு எமக்குத் தேவையில்லை | ஏ, ஆண்டவனே, எம் விண் ணப்பத்தை ஏற்றதாக ஒப்பம் அளி. கருணைக் கட லான அல்லாவின் பெயருடனேயே எதையும் தொடங் குவோம் | அல்லா ஒருவனே என்றும், உள்ளவன் ; அவனுக்கே வெற்றி யென்று கூறு. அவன் பிறக்கவும் இல்லை ; அவனைப் பெற்றவரும் இல்லை. அவன் ஒப் பற்றவன், புலன்களுக்கு அப்பாற் பட்டவன். |

२३. * मज़दा अत मोइ वहिश्ता

स्रवा ओस्चा श्योथनाचा वओचा ।

---

* பார்ஸி மதப் பிரார்த்தனை.

ता-तू वह मनंघहा
अशाचा इषुदेम स्तुतो
क्षमा का क्षथ्रा अहूरा फेरषेम्
वस्ना हइथ्येम् दाओ अहूम् ॥

23. மஜ்தா அத் மோயி வஹிஶ்தா
ஶ்ரவா ஒஶ்சா ச்யோதநாசா வவோசா |

தா தூ வஹ் மனங்கஹா
அஶாசா இஷீதேம் ஸ்துதோ
க்ஷமா கா க்ஷத்ரா அஹீரா பேரஷேம்
வஸ்னு ஹயித்யேம் தாவோ அஹூம் ||

ஏ போர் மதத், உண்மைச் சமயத்தின் கட்டளையை, நன்மை பயக்கும் செயல் செய்யும் வகையைக்காட்டிச் செல். அந் நல்வழி நடந்து நான் என் பிறவிப் பயனைப் பெறுவேனாக | நான் இடையறு முன்னேற்றம் எய்தி உன் புகழைப் பாடிக்கொண்டிருப்பேனாக. உன்னுடைய உயிரொளி பெற்று என் வாழ்க்கைமலர் மலர்வதாக. மண்ணில் இதற்கு மகிழ்ச்சியும் விண்ணில் ஆனந்தமும் கிட்டுவதாக.

24.

Lead, kindly Light, amid the encircling gloom*
Lead Thou me on:
The night is dark and I am far from home,
Lead Thou me on.
Keep Thou my feet, I do not ask to see
The distant scene; one step enough for me.
I was not ever thus, nor prayed that Thou
Shouldst lead me on;
I loved to choose and see my path; but now
Lead Thou me on.
I loved the garish day, and spite of fears,
Pride ruled my will: remember not past years.
So long Thy power hath blest me, sure it still
Will lead me on,
O'er moor and fen, o'er crag and torrent, till
The night is gone;
And with the morn, those angel faces smile,
Which I have loved long since and lost awhile.

---

* கிறிஸ்தவ மதப் பிரார்த்தனை.

அருள் சோதியே ! வழிகாட்டிடு ! என்னை
அழைத்துமே ஐய சென்றிடு !
இருள் சூழுதே அப்பா, எங்கு நான் செல்வேன் ?
இல்லம் தூரத்தி லாச்சுதே !
மருளும் உற்றன எந்தன் பாதங்கள்,
மன்னவா அருள் செய்குவாய் !
பொருள் பல இனி பார்க்க வேண்டிலேன் ;
போது மிந்த அநுபவம்.
" வழி எனக்கு நீ காட்டுக ! " என
வந்தனை செய் தறிகிலேன் ;
விழி குறித்த படியிதுவரை
வேகமாய்ச் சென்ற பாவியேன்.
வழி பயம் உண்டு ஆயினும் டம்பம்
வளர் திமிர் கொண்டு சென்றனன் ;
பழி மிகுந்த என் பழைய நாட்களை
பரனே ! நீயு மறப்பையோ ?
அகதியின் மீது ஆசை தந்திடு !
அது இங்கு வழி காட்டிடும் ;
சகதி தன்னையும், சரளைக் கல்லையும்
சரமழையையும் தாண்டுவேன்.
அகன்றிடும் இருள் ; அருண காலத்தில்
அமரர் புன்னகை காணுவேன் ;
பகலைப் பார்த்திட ஆர்வ முற்றனன்
பரமனே வழி காட்டுவாய் !

२५. वैष्णव जन तो तेने कहीए जे
पीड पराई जाणे रे ।
पर दुःखे उपकार करे तोये
मन अभिमान न आणे रे । ध्रु
सकळ लोकमां सहुने वंदे
निन्दा न करे केनी रे ।
वाच काछ मन निश्चळ राखे ।
धन धन जननी तेनी रे ।
समदृष्टि ने तृष्णा त्यागी
पर-स्त्री जेने मात रे ।
जिह्वा थकी असत्य न बोले
परधन नव झाले हाथ रे ।
मोह माया व्यापे नहिं जेने
दृढ़ वैराग्य जेना मनमां रे ।
रामनामशुं ताळी लागी,
सकळ तीरथ तेना तनमां रे ।
वणलोभी ने कपट रहित छे,
काम क्रोध निवार्या रे ।
भणे नरसैंयो तेनुं दरसन करतां
कुळ एकोतेर तार्या रे ।

**25.** வைஷ்ணவ ஜன தோ தேனே கஹியே ஜே
பீட பராயி ஜாணே ரே !

பர துக்கே உபகார கரே தோயே
மன அபிமான ந ஆணே ரே ||

ஸகல லோக மா ஸஹுனே வந்தே
நிந்தா ந கரே கேனீ ரே |

வாசகாச மன நிச்சல ராகே
தன தன ஜனனீ தேனீ ரே ||

ஸமத்ருஷ்டினே த்ருஷ்ணு த்யாகீ
பரஸ்திரீ ஜேனே மாதரே |

ஜிஹ்வா தகீ அஸத்ய ந போலே
பரதன நவ ஜாலே ஹாத ரே ||

மோஹ மாயா வ்யாபே நஹி ஜேனே
த்ருட வைராக்ய ஜேனு மன் மாரே |

ராம நாம சும் தாளீ லாகீ
ஸகல தீரத தேனு தன்மாம் ரே ||

வணலோபீ னே கபட ரஹித சே
காமக்ரோத நிவார்யா ரே |

பணே நரஸை யோ தேனு தர்ஸன கரதாம்
குல ஏகோ தேர தார்யா ரே. ||

சிந்து பைரவி—ஆதி

25. சொல்லுவம் வைஷ்ணவன் யாரெனக் கேளீர்
சோர்ந்தவர் பீடையை அறிவானே
எல்லோர் தம் துக்கத்தை எரிப்பவனுயினும்,
என்னளவும் கர்வம் அடையானே. (சொல்லுவம்)

மன்னுயிர் மக்களை வந்தித்து நிற்பான்
மாசுறு நிந்தனை மொழி யானே.
சொன்மன முடலதில் சுத்தம தானவன்
சோதி யுற்ருள் பெற்றதாய் மாரே. (சொ)

பாவப் பேராசை யற்று பார்வை சமத்துவமுற்று
பரஸ்திரீயைத் தாயெனப் பணிவானே.
நாவினுல் பொய் மொழி நவிலவும் மாட்டான்
நாளும் பிறர் செல்வம் தீண்டானே. (சொ)

மாயையும் மோகமும் மாயும் அவன்பால்
மனத்தில் வைராக்கிய முறுவானே.
ஓயாமல் ராமனை உள்ளம் நினைந்திட
உண்டு புண்ணியப் புனல் உடலதிலே. (சொ)

காமமும் லோபமும் கபடமும் கோபமும்
கனவிலு மில்லாத கனவானே.
பாமரர் பார்த்திட பற்பலதலை முறை
பாவனம் அடைந்திடச் செய்வானே. (சொ)

२६

१. सुजलां सुफलां मलयज शीतलां शस्यश्यामलां मातरम् ।

२. शुभ्रज्योत्स्ना पुलकितयामिनीं फुल्लकुसुमित
[द्रुमदलशोभिनीम् ।
सुहासिनीं सुमधुरभाषिणीं सुखदां वरदां मातरम्—वन्दे

३. त्रिंशत्कोटि-कंठ-कलकल-निनाद-कराले ।
द्वित्रिंशत्कोटिभुजैर्धृत-खर-करवाले ।
के बोले मा तुमि अबले ?
बहुबलधारीणीं नमामि तारिणीं रिपुदलवारिणीं मातरम्
—वन्दे ।

४. तुमि विद्या, तुमि धर्म, तुमि हृदि, तुमि मर्म त्वं हि प्राणाः
[शरीरे ।
बाहुते तुमि मा शक्ति, हृदये तुमि मा भक्ति ।
तोमारअि प्रतिमा गाड़ि मन्दिरे मन्दिरे—वन्दे ।

५. त्वं हि दुर्गा दशप्रहरणधारिणी कमला
[कमलदलविहारिणी ।
वाणी विद्यादायिनी नमामि त्वाम् ।

६. नमामि कमलां अमलां अतुलां सुजलां सुफलां मातरम्
—वन्दे ।
श्यामलां सरलां सुस्मितां भूषितां धरणीं भरणीं मातरम्
—वन्दे मातरम् ।

## 26

1. ஸுஜலாம், ஸுபலாம் மலயஜ ஶீதலாம்
ஶஸ்ய ஶ்யாமலாம் மாதரம் (வந்தே)

2. ஶுப்ர ஜ்யோத்ஸ்நா புலகித யாமிநீம்
புல்ல குஸுமித த்ரும தள ஶோபிநீம்
ஸுஹாஸிநீம், ஸுமதுர பாஷிணீம்
ஸுகதாம், வரதாம், மாதரம். (வந்தே)

3. திரிம்ஶத் கோடி கண்ட கலகல நிநாத கராலே
த்விதிரிம்ஶத் கோடி புஜைர் த்ருத கர கரவாலே
கே போலே, மா துமி அபலே ?
பஹுபல தாரிணீம், நமாமி தாரிணீம்
ரிபுதள வாரிணீம், மாதரம். (வந்தே)

4. துமி வித்யா, துமி தர்ம,
துமி ஹ்ருதி, துமி மர்ம,
த்வம்ஹி ப்ராணு: ஶரீரே
பாஹுதே துமி மா சக்தி
ஹ்ருதயே துமி மா பக்தி
தொமாரயி ப்ரதிமா காடி மந்திரே மந்திரே. (வந்தே)

5. த்வம்ஹி துர்கா தஶப்ரஹரண தாரிணீ
கமலா கமலதல விஹாரிணீ
வாணீ வித்யா தாயிநீ, நமாமி த்வாம். (வந்தே)

6. நமாமி, கமலாம், அமலாம், அதுலாம்,
ஸுஜலாம், ஸுபலாம் மாதரம்
ஶ்யாமலாம், ஸரலாம், ஸுஸ்மிதாம், பூஷிதாம்,
பரணீம், தரணீம், மாதரம். (வந்தே மாதரம்)

## 26

1. நளிர்மணி நீரும், நயம்படு கனிகளும்,
குளிர் பூந்தென்றலும், கொழும் பொழிற் பசுமை
வாய்ந்து நன் கிலகுவை, வாழிய அன்னை! (வந்தே)

2. தெண்ணில வதனிற் சிலிர்த்திடு மிரவும்,
தண்ணியல் விரிமலர் தாங்கிய தருக்களும்,
புன்னகை யொளியும், தேமொழிப் பொலியும்
வாய்ந்தனை, இன்பமும் வரங்களு நல்குவை. (வந்தே)

3. கோடி கோடி குரல்க ளொலிக்கவும்,
கோடி கோடி புயத்துணை கொற்றமார்
நீடு பல்படை தாங்கி முன்னிற்கவும்,
'கூடு திண்மை குறைந்தனை' யென்பதென்?
ஆற்றலின் மிகுந்தனை, அரும்பதங் கூட்டுவை,
மாற்றலர் கொணர்ந்த வன்படை யோட்டுவை. (வந்தே)

4. அறிவுநீ, தருமநீ, உள்ளநீ அதனிடை
மருமநீ, உடற்கண் வாழ்ந்திடு முயிர் நீ;
தோளிடை வன்புநீ, நெஞ்சகத் தன்புநீ,
ஆலயந்தோறும் அணிபெற விளங்கும்
தெய்வச் சிலை யெலாம், தேவி, இங்குனதே. (வந்தே)

5. பத்துப் படைகொளும் பார்வதி தேவியும்
கமலத் திதழ்களிற் களித்திடும் கமலையும்
அறிவினை யருளும் வாணியும் அன்னை நீ! (வந்தே)

6. திரு நிறைந்தனை, தன்னிக ரொன்றிலை !
தீது தீர்த்தனை, நீர்வளஞ் சார்ந்தனை,
மருவு செய்களின் நற்பயன் மல்குவை,
வளனின் வந்ததோர் பைந்நிறம் வாய்ந்தனை,
பெருகு மின்ப முடையை, குறுநகை
பெற் றொளிர்ந்தனை, பல்பணி பூண்டனை,
இரு நிலத்துவந் தெம்முயிர் தாங்குவை,
எங்கள் தாய், நின் பதங்க ளிறைஞ்சுவாம் ! (வந்தே)

---

# மாலைப் பிரார்த்தனை

1. பௌத்தமதப் பிரார்த்தனை—பக்கம் 1
2. ஈசாவாஸ்ய உபநிஷத்—பக்கம் 1

३. यं ब्रह्मा वरुणेन्द्ररुद्रमरुतः स्तुन्वन्ति दिव्यैः स्तवैः
वेदैः सांगपदक्रमोपनिषदैर्गायन्ति यं सामगाः ।
ध्यानावस्थिततद्गतेन मनसा पश्यंति यं योगिनो
यस्यान्तं न विदुः सुरासुरगणा देवाय तस्मै नमः ॥

3. யம் ப்ரம்மா வருணேந்த்ர ருத்ர மருத:
ஸ்துன்வந்தி திவ்யை: ஸ்தவை:
வேதை: ஸாங்கபதக்ரமோபநிஷதை:
காயந்தி யம் ஸாமகா: |
த்யானவஸ்தித தத் கதேன மனஸா
பஶ்யந்தி யம் யோகின:
யஸ்யாந்தம் நவிது: ஸுராஸுர கண
தேவாய தஸ்மை நம: ||

பிரம்மா, வருணன், ருத்திரன் முதலியவர்கள் எவரை எப்பொழுதும் துதித்துக் கொண்டிருக்கிறார்களோ, வேதங்களின் மூலமாக ஸாமகானத்தில் வல்லவர்கள் எவரை எப்பொழுதும் இனிமையாகப் புகழ்ந்து கொண்டிருக்கிறார்களோ, யோகிகள் தியானத்தில் அமர்ந்து எவரிடத்தில் லயித்து விடுகிறார்களோ, எந்த தேவரின் எல்லையை தேவரும் அசுரரும் காண இயலவில்லையோ, அவரை வணங்குவோமாக.

अर्जुन उवाच

४. स्थितप्रज्ञस्य का भाषा समाधिस्थस्य केशव ।
स्थितधीः किं प्रभाषेत किमासीत व्रजेत किम् ॥ १ ॥

அர்ஜுன உவாச

4. ஸ்தித ப்ரக்ஞஸ்ய காபாஷா ஸமாதிஸ்தஸ்ய கேஶவ. |
ஸ்திததீ: கிம் ப்ரபாஷேத கிமாஸீத வ்ரஜேத கிம் ‖ 1

அர்ஜுனன் சொல்லுகிறான் :—

கேசவா, உறுதி கொண்ட அறிவுடன் ஸமாதியில் நிற்போன் எவ்வாறு பேசுவான்? ஸ்திர புத்தி யுடையவன் என்ன சொல்வான்? எப்படி யிருப்பான்? எதனை யடைவான்?

श्रीभगवानुवाच

प्रजहाति यदा कामान्सर्वान्पार्थ मनोगतान् ।
आत्मन्येवात्मना तुष्टः स्थितप्रज्ञस्तदोच्यते ॥ २ ॥

பகவான் உவாச

ப்ரஜஹாதி யதா காமான்
ஸர்வான் பார்த்த மனோகதான் |
ஆத்மன் யேவாத்மனா துஷ்ட:
ஸ்தித: ப்ரக்ஞ: ததோச்யதே ‖ 2

ஸ்ரீ பகவான் சொல்லுகிறான் :

பார்த்தா, ஒருவன் தன் மனதில் எழும் விருப்பங்களனைத்தையும் துறந்து தன்னிலே தான் மகிழ்ச்சி பெறுவானாயின், அப்போது ஸ்திர புத்தியுடையவனென்று சொல்லப்படுகிறான்.

**दुःखेष्वनुद्विग्नमनाः सुखेषु विगतस्पृहः ।**
**वीतरागभयक्रोधः स्थितधीर्मुनिरुच्यते ॥ २ ॥**

**துக்கேஷு அனுத்விக்னமனா:**
**ஸுகேஷு விகதஸ்ப்ருஹ: |**
**வீத ராக பயக்ரோத:**
**ஸ்திததீ: முனிருச்யதே ‖** 3

துன்பங்களிலே மனங்கெடாதவனாய்,
இன்பங்களிலே ஆவலற்றவனாய்,
அச்சமும் சினமுந் தவிர்த்தவனாய்,
அம் முனி,
மதியிலே உறுதி வாய்ந்தவனென்ப.

**यः सर्वत्रानभिस्नेहस्तत्तत्प्राप्य शुभाशुभम् ।**
**नाभिनन्दति न द्वेष्टि तस्य प्रज्ञा प्रतिष्ठिता ॥ ४ ॥**

**யஸ் ஸர்வத்ரான் அபிஸ்னேஹ:**
**தத்தத் ப்ராப்ய ஶுபாஶுபம் |**
**நாபி நந்ததி நத்வேஷ்டி**
**தஸ்ய ப்ரக்ஞா ப்ரதிஷ்டிதா ‖** 4

எவன் நல்லதும் கெட்டதும் வருமிடத்தே எதனிலும் வீழ்ச்சி யற்றவனுல், ஆவலுறுவதும் பகைப்பது மின்றி யிருப்பானே, அவனுடைய அறிவே நிலை கொண்டது.

**यदा संहरते चायं कूर्मोऽङ्गानीव सर्वशः ।**
**इन्द्रियाणींद्रियार्थेभ्यस्तस्य प्रज्ञा प्रतिष्ठिता ॥ ५ ॥**

**யதா ஸம்ஹரதே சாயம்**
**கூர்மோங்கானீவ ஸர்வஶ: |**
**இந்த்ரியாணீந்த்ரியார்த்தேப்ய:**
**தஸ்ய ப்ரக்ஞா ப்ரதிஷ்டிதா ||** 5

ஆமை தன் அவயவங்களை இழுத்துக் கொள்வது போல், எப்புறத்தும் விஷய பதார்த்தங்களினின்று புலன்களை யொருவன் மீட்க வல்லானுயின், அவனறிவே நிலைகொண்டது.

**विषया विनिवर्तन्ते निराहारस्य देहिनः ।**
**रसवर्जं रसोऽप्यस्य परं दृष्ट्वा निवर्तते ॥ ६ ॥**

**விஷயா விநிவர்த்தந்தே**
**நிராஹாரஸ்ய தேஹின: |**
**ரஸவர்ஜம் ரஸோப்யஸ்ய**
**பரம் த்ருஷ்ட்வா நிவர்த்ததே ||** 6

தம்மைக் கவராத ஜீவனிடமிருந்து விஷயங்கள் தாமே விலகிக்கொள்ளுகின்றன. எனினும் அவற்றிடமுள்ள சுவையை இவன் மறப்பதில்லை. பரம்பொருளைக் காண்பானாயின் அச் சுவையுந் தீர்ந்துவிடும்.

यततो ह्यपि कौन्तेय पुरुषस्य विपश्चितः ।
इन्द्रियाणि प्रमाथीनि हरन्ति प्रसभं मनः ॥ ७ ॥

யததோ ஹ்யபி கௌந்தேய
புருஷஸ்ய விபஶ் சிதஃ |
இந்த்ரியாணி ப்ரமாதீனி
ஹரந்தி ப்ரஸபம் மனஃ ‖ 7

குந்தியின் மகனே, (தவ) முயற்சியுடைய புருஷனிடத்திலே கூட இந்திரியங்கள் வரம்பு கடந்து செல்லும்போது தம்முடன் மனத்தையும் வலிய வாரிச் செல்கின்றன.

तानि सर्वाणि संयम्य युक्त आसीत मत्परः ।
वशे हि यस्येन्द्रियाणि तस्य प्रज्ञा प्रतिष्ठिता ॥ ८ ॥

தானி ஸர்வாணி ஸம்யம்ய
யுக்த ஆஸீத மத்பரஃ |
வஶே ஹி யஸ்யேந்த்ரியாணி தஸ்ய
ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா ‖ 8

அவற்றை யெல்லாம் நன்ருக அடக்கி, யோகத்தில் அமர்ந்தவனய், என்னைப் பரமாகக் கொண்டு, புலன்களை வசப்படுத்தி வைத்திருப்பவன் எவனே, அவனுடைய அறிவே நிலைகொண்டது.

ध्यायतो विषयान्पुंसः संगस्तेषूपजायते ।
संगात्संजायते कामः कामात्क्रोधोऽभिजायते ॥ ९ ॥

த்யாயதோ விஷயான் பும்ஸ:
ஸங்கஸ்தேஷூப ஜாயதே |
ஸங்காத் ஸஞ்ஜாயதே காம:
காமாத் க்ரோதோபி ஜாயதே ‖ 9

மனிதன் விஷயங்களைக் கருதும்போது அவற்றில் பற்றுதலுண்டாகிறது. பற்றுதலால் விருப்பமுண்டாகிறது. விருப்பத்தால் சினம் பிறக்கிறது.

क्रोधाद्भवति संमोहः संमोहात्स्मृतिविभ्रमः ।
स्मृतिभ्रंशाद्बुद्धिनाशो बुद्धिनाशात्प्रणश्यति ॥ १० ॥

க்ரோதாத் பவதி ஸம்மோஹ:
ஸம்மோஹாத் ஸ்மிருதி விப்ரம: |
ஸ்ம்ருதி ப்ரம்ஶாத் புத்தி நாஶ:
புத்தி நாஶாத் ப்ரணஶ்யதி ‖ 10

சினத்தால் மயக்கம்; மயக்கத்தால் நினைவுத் தவறுதல்; நினைவுத் தவறுதலால் புத்தி நாசம்; புத்தி நாசத்தால் அழிகிறன்.

रागद्वेषवियुक्तैस्तु विषयानिन्द्रियैश्चरन् ।
आत्मवश्यैर्विधेयात्मा प्रसादमधिगच्छति ॥ ११ ॥

ராகத்வேஷ வியுக்தைஸ்து
விஷயான் இந்த்ரியைஶ் சரன் |
ஆத்ம வஶ்யை: விதேயாத்மா
ப்ரஸாத மதிகச்சதி ‖ 11

விழைதலும் பகைத்தலு மின்றித் தனக்கு வசப்பட்ட புலன்களுடன் விஷயங்களிலே ஊடாடுவோனாய்த் தன் விதிக்குத் தான் உட்பட்ட மனிதன் ஆறுதலடைகிறான்.

प्रसादे सर्वदुःखानां हानिरस्योपजायते ।
प्रसन्नचेतसो ह्याशु बुद्धिः पर्यवतिष्ठते ॥ १२ ॥

ப்ரஸாதே ஸர்வ துக்காநும்
ஹானிரஸ்யோப ஜாயதே |
ப்ரஸன்ன சேதஸோ ஹ்யாஶு:
புத்தி: பர்யவதிஷ்டதே ‖ 12

சாந்தி நிலையில் மனிதனுக்கு எல்லாத் துன்பங்களும் அழிகின்றன. சித்தம் சாந்தி பெற்ற பின் ஒருவனுடைய புத்தி விரைவிலே நிலைப்படுகிறது.

नास्ति बुद्धिरयुक्तस्य न चायुक्तस्य भावना ।
न चाभावयतः शांतिरशांतस्य कुतः सुखम् ॥ १३ ॥

நாஸ்தி புத்தி ரயுக்தஸ்ய
நசா யுக்தஸ்ய பாவனு |
நசா பாவயதஃ ஶாந்திஃ
அஶாந்தஸ்ய குதஃ ஸுகம் || 13

யோக மில்லாதவனுக்கு புத்தி யில்லை. யோக மில்லாதவனுக்கு மனோபாவனை யில்லை. மனோ பாவனை யில்லாதவனுக்கு சாந்தி யில்லை. சாந்தி யில்லாதவனுக்கு இன்பமேது ?

इंद्रियाणां हि चरतां यन्मनोऽनुविधीयते ।
तदस्य हरति प्रज्ञां वायुर्नावमिवांभसि ॥ १४ ॥

இந்த்ரியாணும் ஹி சரதாம்
யன்மனோனு விதீயதே |
ததஸ்ய ஹரதிஃ ப்ரக்ஞாம்
வாயுர் நாவமிவாம்பஸி || 14

இந்திரியங்கள் சலிக்கையில் ஒருவனுடைய மனமும் அவற்றைப் பின்பற்றிச் செல்லுமாயின், அம் மனம் கடலில் தோணியைக் காற்று மோதுவது போல் அறிவை மோதுகிறது.

तस्माद्यस्य महाबाहो निगृहीतानि सर्वशः ।
इं द्रियाणींद्रियार्थेभ्यस्तस्य प्रज्ञा प्रतिष्ठिता ॥ १५ ॥

தஸ்மாத் யஸ்ய மஹாபாஹோ
நிக்ருஹீதானி ஸர்வஶ: |
இந்திரியாணீந்த்ரியார்த்தேப்ய:
தஸ்ய ப்ரக்ஞா ப்ரதிஷ்டிதா || 15

ஆதலால், பெருந் தோளாய், யாங்கணும் விஷயங்களினின்றும் இந்திரியங்களைக் கட்ட வல்லான் எவனோ, அவனறிவே நிலை கொண்டது.

या निशा सर्वभूतानां तस्यां जागर्ति संयमी ।
यस्यां जागर्ति भूतानि सा निशा पश्यतो मुनेः ॥ १६ ॥

யாநிஶா ஸர்வ பூதானும்
தஸ்யாம் ஜகார்த்தி ஸம்யமீ |
யஸ்யாம் ஜாக்ரதி பூதானி
ஸாநிஶா பஶ்யதோ முனே: || 16

எல்லா உயிர்களுக்கும் இரவாகிய நேரத்தில், (தன்னைக் கட்டிய) முனி விழித்திருக்கிறான். மற்ற உயிர்கள் விழித்திருக்கும் நேர மெதுவோ அதுவே முனிக் கிரவு.

आपूर्यमाणमचलप्रतिष्ठं
समुद्रमापः प्रविशंति यद्वत् ।
तद्वत्कामा यं प्रविशंति सर्वे
स शान्तिमाप्नोति न कामकामी ॥ १७ ॥

அபூர்யமாணம் அசலப்ரதிஷ்டம்
ஸமுத்ரமாப: ப்ரவிஶந்தி யத்வத் |
தத்வத் காமா யம் ப்ரவிஶந்தி ஸர்வே
ஸ ஶாந்தி மாப்னோதி நகாம காமீ || 17

கடலில் நீர்த் தொகுதிகள் வந்து விழுகையில் அது மேன்மேலும் நிரப்புதற் குரிதாய் அசையாநிலை கொண்டிருப்பது போல, விருப்பங்கள் தன்னுள்ளே புகும்போது இயல்வான் எவனோ அவன் சாந்தியடைகிறான். விருப்பங்களை விரும்புவோன் அதனை யடையான்.

विहाय कामान्यः सर्वान्पुमांश्चरति निःस्पृहः ।
निर्ममो निरहंकारः स शांतिमधिगच्छति ॥ १८ ॥

விஹாய காமான் யஸ்ஸர்வான்
புமான் சரதி நிஸ்ப்ருஹ: |
நிர்மமோ நிரஹங்கார:
ஸஶாந்திம் அதிகச்சதி || 18

இச்சை யற்றான், எல்லா இன்பங்களையுந் துறந்தான், எனதென்பதற்றான், யானென்பதற்றான், அவனே சாந்தி நிலை யடைகிறான்.

एषा ब्राह्मी स्थितिः पार्थ नैनां प्राप्य विमुह्यति ।
स्थित्वास्यामन्तकालेऽपि ब्रह्मनिर्वाणमृच्छति ॥ १९ ॥

யேஷா ப்ராம்மீ ஸ்திதி: பார்த்த
நைனும் ப்ராப்ய விமுஹ்யதி |
ஸ்தித்வா ஸ்யாமந்த காலேபி
ப்ரம்ம நிர்வாண ம்ருச்சதி ‖ 19

பார்த்தா, இது பிரம்ம ஸ்திதி. இதை யடைந்தோன் பிறகு மயங்குவதில்லை. இறுதிக் காலத்தி லேனும் இதில் நிலை கொள்வோன் பிரம்ம நிர்வாண மெய்துகிறான்.

५. त्वमेव माता च पिता त्वमेव
त्वमेव बन्धुश्च सखा त्वमेव ।
त्वमेव विद्या द्रविणं त्वमेव
त्वमेव सर्वं मम देव देव ॥

5. த்வமேவ மாதாச பிதாத்வமேவ
த்வமேவ பந்துஶ்ச ஸகாத்வமேவ
த்வமேவ வித்யா த்ரவிணம் த்வமேவ
த்வமேவ ஸர்வம் மம தேவதேவ.

ஹே தேவ தேவனே! நீயே என் தாய், நீயே என் தந்தை, நீயே என் உற்றார், உறவினர், நண்பர் ஆகியோர். நீயே என் கல்வியும் செல்வமும் ஆகிய எல்லாமாவாய்.

6. பதினொரு விரதங்கள்—பக்கம் 12
7. இஸ்லாம் மதப் பிரார்த்தனை—பக்கம் 13
8. பார்ஸி மதப் பிரார்த்தனை—பக்கம் 15

9. * When I survey the wondrous Cross
On which the Prince of Glory died,
My richest gain I count but loss,
And pour contempt on all my pride.
Forbid it, Lord, that I should boast
Save in the Cross of Christ, my God;
All the vain things that charm me most,
I sacrifice them to His Blood.
See from His Head, His Hands, His Feet,
Sorrow and love flow mingling down;
Did e'er such love and sorrow meet,
Or thorns compose so rich a crown?
Were the whole realm of nature mine,
That were an offering far too small;
Love so amazing, so divine,
Demands my soul, my life, my all.
To Christ, Who won for sinners grace
By bitter grief and anguish sore,
Be praise from all the ransomed race,
For ever and for evermore.

---

* கிறிஸ்தவ மதப் பிரார்த்தனை.

१०. जनगणमन-अधिनायक जय हे भारत-भाग्यविधाता ।
पंजाब सिन्धु गुजरात मराठा, द्राविड उत्कल बंग ।
विन्ध्य हिमाचल यमुना गंगा, उच्छल-जलधि तरंग ।
तव शुभ नामे जागे, तव शुभ आशिष मागे ।
गाहे तव जय गाथा ।

जनगण-मंगलदायक जय हे भारत-भाग्यविधाता ।
जय हे ! जय हे ! जय हे ! जय जय जय जय हे ! १

अहरह तव आह्वान प्रचारित, शुनितव उदार वाणी ।
हिन्दु बौद्ध शीख जैन पारसिक मुसलमान ख्रिस्तानी ।
पूरब पश्चिम आसे, तव सिंहासन पासे ।
प्रेमहार होय गांथा ।
जनगण-ऐक्यविधायक जय हे, भारत भाग्यविधाता ।
जय हे ! जय हे ! जय जय जय जय हे ! २

पतन-अभ्युदय-बंधुर पंथा युग-युग-धावित यात्री !
हे चिरसारथि ! तव रथचक्रे मुखरित पथ दिनरात्री !
दारुण विप्लव माझे, तव शंखध्वनि बाजे ।

संकटदुःख त्राता।
जनगण-पथपरिचायक जय हे भारत-भाग्यविधाता।
जय हे! जय हे! जय हे! जय जय जय जय हे! ३

घोर तिमिरघन निबिड निशीथे पीडित मूर्छित देशे।
जाग्रत छिल तव अविचल मंगल नतनयने अनिमेषे।
दुःस्वप्ने आतङ्के, रक्षा करिले अंके।
स्नेहमयी तुमि माता।
जनगण-दुःखत्रायक जय हे भारत-भाग्य विधाता।
जय हे! जय हे! जय हे! जय जय जय जय हे! ४

रात्रि प्रभातिल उदिल रविच्छवि पूर्वउदयगिरि-भाले।
गाहे विहंगम, पुण्य समीरण नवजीवनरस ढाले।
तव करुणारुण रागे, निद्रित भारत जागे।
तव चरणे नत माथा।
जय जय जय हे जय राजेश्वर भारत-भाग्य विधाता।
जय हे! जय हे! जय हे! जय जय जय जय हे! ५

**10.**

ஜனகணமன-அதிநாயக ஜய ஹே பாரத-பாக்யவிதாதா
பஞ்சாப் ஸிந்து குஜராத மராடா, த்ராவிட உத்கல வங்க
விந்த்ய ஹிமாசல யமுனு கங்கா, உச்சல ஜலதி தரங்க
தவ சுப நாமே ஜாகே, தவ சுப ஆசிஷ மாகே
காஹே தவ ஜய காதா
ஜனகண-மங்கள தாயக ஜயஹே பாரத-பாக்யவிதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே! ஜய ஜய ஜய ஜய ஹே ! 1

அஹரஹ தவ ஆஹ்வான ப்ரசாரித சுனி தவ உதாரவாணி
ஹிந்து பௌத்த ஸிக ஜைன பாரஸிக
முஸல்மான் க்றிஸ்தானி
பூரப பஶ்சிம ஆஸே, தவஸிம்மாஸன பாஸே
ப்ரேம ஹார ஹோய காதா
ஜனகண-ஐக்யவிதாயக ஜய ஹே, பாரத-பாக்யவிதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே! ஜய ஜய ஜய ஜய ஹே ! 2

பதன-அப்யுதய பந்துர பந்தா யுக யுக தாவித யாத்ரீ
ஹே சிரஸாரதி! தவரத சக்ரே முகரித பத தினராத்ரி
தாருண விப்லவ மாஜே, தவ சங்கத்வனி பாஜே
ஸங்கடதுக்க த்ராதா.
ஜனகண-பதபரிசாயக ஜய ஹே பாரத-பாக்யவிதாதா
ஜய ஹே ! ஜய ஹே ! ஜய ஹே ! ஜய ஜய ஜய ஜய ஹே ! 3

கோர திமிரகன நிபிட நிசீதே பீடித மூர்ச்சித தேசே
ஜாக்ரத சில தவ அவிசல மங்கள நதநயனே அநிமேஷே
துஸ்வப்னே ஆதங்கே ரக்ஷா கரிலே அங்கே
ஸ்நேஹமயீ துமி மாதா
ஜனகண-துக்கத்ராயக ஜய ஹே பாரத-பாக்யவிதாதா
ஜய ஹே ! ஜய ஹே ! ஜய ஹே ! ஜய ஜய ஜய ஜய ஹே. 4

ராத்ரி ப்ரபாதில உதில ரவிச்சவி பூர்வஉதயகிரி-பாலே
காஹே விஹங்கம புண்ய ஸமீரண நவஜீவனரஸடாலே
தவ கருணருணராகே, நித்ரித பாரத ஜாகே
ஜய ஜய ஜய ஹே ஜய ராஜேஶ்வர பாரத-பாக்யவிதாதா
ஜய ஹே ! ஜய ஹே ! ஜய ஹே ! ஜய ஜய ஜய ஜய ஹே ! 5

10. ஜன கண மன அதி நாயகனே, ஜயபாரதர் விதியை
வகுப்போய் ! [வங்கம்.
பாஞ்சால, ஸிந்து, கூர்ஜர, மராட்டிர, திராவிட உத்கல
விந்திய ஹிமாலயம், யமுனை, கங்கை அலைபாயும்
பெருங்கடல்கள்.
உன்திரு நாமம் கேட்டே உன்பேர்ஆசி விழைந்து
உன்புகழ் என்றும் பாடும்.
ஜன கண மங்களம் அளிப்போய், ஜெயபாரதர் விதி
வகுப்போய்
ஜயமே, ஜெயமே, ஜயமே, ஜய ஜய ஜய ஜயமே ! 1

இரவோடு பகலும் எழுமுனதழைப்பை ஏற்றுடன்
எழுந்துவந்தாரே.
ஹிந்து, பௌத்தரும், ஜைன சீக்கியரும், பார்ஸி,
கிறிஸ்து முஸல்மானும்,
கீழ்மேல்திசையினர் உந்தன் சிங்காதனத்தருகணுகி,
அன்பணி ஆரம் போலே
ஜன கண ஐக்யமளிப்போய், ஜயபாரதர் விதி
வகுப்போய்
ஜயமே’ ஜயமே, ஜயமே, ஜய ஜய ஜய ஜயமே. 2

தாழ்வும் வாழ்வுமாய் விரவிய வழியே, யுகயுகமாய்
நீ நடப்பாய்
தெய்வசாரதி ! அல்லும் பகலும் உன் தேராழி ஒலிக்கும்
கொடிய குழப்பத்திடையே கேட்டிடச் சங்கமுழக்கம்
சங்கடமெல்லாம் ஒழியும்.
ஜன கண வழிகாட்டிடுவோய், ஜயபாரதர் விதி
வகுப்போய்
ஜயமே ! ஜயமே ! ஜயமே ! ஜய ஜய ஜய ஜயமே ! 3

கொடியகாரிருள் சூழ்ந்த இரவிலே, மூச்சடங்கி
வீழ்நாட்டை,
குனித்த மங்களம் பொங்கும் விழிகளில் இமைகணமும்
வீழாமே
தீயகனவொடு கொடுமையகற்றிமார்புறக் காப்பாய் நீயே
அன்புருவானய் தாயே !
ஜன கண துக்கமகற்றி, ஜயபாரதர் விதி வகுப்போய்,
ஜயமே, ஜயமே, ஜயமே, ஜய ஜய ஜய ஜயமே. 4

பொழுது புலர்ந்திடும்போதிலே இளங்கதிர் கீழ்த்திசை
மலைமிசை தோன்ற
பறவைகள் பாடத்தென்றல் காற்றோடு புதுவாழ்
வெங்கும் பாய
நின் கருணைக் காலை ஒளியில் கனவு நீத்து நாடெழவே
பதங்களிலே வணங்கிற்றே.
ஜய, ஜய, ஜயராஜேச்வர ஜயமே பாரதர்விதியை
வகுப்போய்,
ஜயமே, ஜயமே, ஜயமே, ஜய ஜய ஜய ஜயமே. 5

## வித்தியாலய மந்திரங்கள்

१. ओं सहना ववतु सहनौ भुनक्तु सहवीर्यं करवा वहै।
तेजस्विनावधीतमस्तु मा विद्विषा वहै ॥
ओं शान्तिः शान्तिः शान्तिः ।

1. ஓம் ஸஹநாவவது ஸஹநெள புனக்து
ஸஹவீர்யம் கரவாவஹை
தேஜஸ்விநாவதீத மஸ்து மாவித்விஷா வஹை ‖
ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

கடவுள் நம்மைக் காப்பாராக.
உண்டியும், உடையும், உவப்பன யாவும்
தந்து நம்மைத் தாங்குவாராக ;
காரியம் யாவினும் கருத்தொரு மித்து
வீரியத்துடன் நாம் விரைந்தே செய்குவம்
கல்வியும், ஞானமும், கலையுணர் திறனும்
ஒளியுடன் வளர்ந்து ஓங்குவதாக ;
உள்ளத்தாலும் ஒருவர்மாட் டொருவர்
கோபமும் வெறுப்பும் கொள்ளாதிருப்போம் ;
சாந்தி பெறுவோம், சாந்தி பெறுவோம் !
காந்தியைப் போற்றி சாந்தி பெறுவோம் !

२. योऽन्तः प्रविश्य मम वाचमिमां प्रसुप्ताम्
संजीवयत्यखिलशक्तिधरः स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तुभ्यम् ॥

2. யோந்த: ப்ரவிச்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்ய கிலஸக்திதர: ஸ்வதாம்நா |
அன்யாம்ஸ்ச ஹஸ்தசரண ஸ்ரவண த்வகாதீன்
ப்ராணுன்னமோ பகவதே புருஷாய துப்யம் ||

ஏ சர்வ சக்திகளும் வாய்ந்தவனே! நீ என் உள்ளத்துள் உள்ளாய். தன் ஒளியினுல் என் உறங்கும் வாக்கை எழுப்புகிருய். என் கைகள், கால்கள், காதுகள், தோல் முதலிய அங்கங்களில் உயிரை நிரப்புகிருய். ஏ பகவானே! உனக்குப் பல பல வணக்கங்கள்.

३. ब्रह्मार्पणं ब्रह्महविः ब्रह्माग्नौ ब्रह्मणाहुतम्
ब्रह्मैव तेन गन्तव्यं ब्रह्मकर्म समाधिना ॥

3. ப்ரம்மார்பணம் பரம்ஹவி: ப்ரமாக்னௌ ப்ரம்மணுஹுதம்
ப்ரம்மைவ தேன கந்தவ்யம் ப்ரம்மகர்ம ஸமாதினு ||

பிரம்மத்துக்கு அர்ப்பணமாக பிரம்ம அவியை பிரம்மத் தீயில் பிரம்மத்தால் ஹோமம் பண்ணுவோன், பிரம்மத்தின் செய்கையில் சமாதான மெய்திஞேன், அவன் பிரம்மத்தை அடைவான்.

४. असतो मा सत् गमय ।
तमसो मा ज्योतिर्गमय ।
मृत्योर्माऽमृतं गमय ।

4. அஸதோ மா ஸத் கமய
தமஸோ மா ஜ்யோதிர் கமய
ம்ருத்யோர் மா அம்ருதம் கமய.

கடவுளே என்னை பொய்யினின்றும் உண்மைக்கு அழைத்துச் செல். இருட்டினின்றும் ஒளிக்கு அழைத்தேகு. சாவினின்றும் அமர நிலைக்கு அழைத்துப்போ.

5. நாடிப் புலங்கள் உழுவார் கரமும் நயவுரைகள்
தேடிக் கொழிக்கும் கவிவாணர் நாவும் செங்கருணை
ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்சும் உவந்து நடம்
ஆடிக்களிக்கும் மயிலே உன் பாதம் அடைக்கலமே.

6. ஆத்தி சூடி இளம் பிறை அணிந்து
மோனத் திருக்கும் முழுவெண் மேனியான்
கரு நிறங் கொண்டுபாற் கடல் மிசைக் கிடப்போன்
மகமது நபிக்கு மறை அருள் புரிந்தோன்
ஏசுவின் தந்தை எனப்பல மதத்தினர்
உருவகத் தாலே உணர்ந்துண ராது
பலவகையாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே ; அதன் இயல் ஒளியுறும் அறிவாம் ;
அதன் நிலை கண்டார் அல்லலை அகற்றினர்.
அதன் அருள் வாழ்த்தி அமரவாழ் வெய்துவோம்.

## பாசுரங்கள்—பாடல்கள்

க

பொழுது புலர்ந்தது ; யாம் செய்த தவத்தால்
புன்மை யிருட்கணம் போயின யாவும்
எழுபசும் பொற்சுடர் எங்கணும் பரவி
யெழுந்து விளங்கிய தறிவெனும் இரவி ;
தொழுதுனை வாழ்த்தி வணங்குதற் கிங்குன்
தொண்டர் பல்லாயிரர் சூழ்ந்து நிற்கின்றோம்
விழிதுயில் கின்றனை யின்னுமெந் தாயே !
வியப்பிது காண் ! பள்ளி யெழுந்தருளாயே. 1

மதலைய ரெழுப்பவுந் தாய் துயில்வாயோ ?
மாநிலம் பெற்றவ ளிஃதுணராயோ ?
குதலை மொழிக்கிரங் காதொரு தாயோ ?
கோமகளே ! பெரும் பாரதர்க் கரசே !
விதமுறு நின்மொழி பதினெட்டுங் கூறி
வேண்டிய வாறுனைப் பாடுதுங் காணாய் !
இதமுற வந்தெமை யாண்டருள் செய்வாய் !
ஈன்றவளே ! பள்ளி யெழுந்தருளாயே ! 2

உ

உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

௫

பொன்னூர் மேனியனே புலித் தோலை யரைக்கசைத்து
மின்னூர் செஞ்சடைமேன் மிளிர் கொன்றை யணிந்தவனே.
மன்னே மாமணியே மழபாடியுண் மாணிக்கமே
அன்னே யுன்னையல்லா லினியாரை நினைக்கேனே.

௬

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

௭

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக்குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப் பொரு ளாவது
நாதனுமம் நமச்சிவாயவே.

௮

உண்ணும் சோறு பருகுநீர்
தின்னும் வெற்றிலையுமெல்லாம்
கண்ணன் எம் பெருமா னென்றென்றே
கண்கள் நீர் மல்கி
மண்ணினுள் அவன் சீர்
வளம்மிக்கவனூர் வினவித்
திண்ணம் என் இளமான்
புகுமூர் திருக்கோளூரே.

எ

பால் நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவ பெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

அ

குலந்தரும் செல்வம் தந்திடும்
அடியார்படு துயர் ஆயின எல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள் விசு[illegible]ருளும்
அருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும்
பெற்ற தாயினும் ஆயின செய்யும்
நலந்தரும் சொல்லை நான் கண்டுகொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.

கூ

சுண்ண வெண் சந்தனச் சாந்தும்
சுடர்திங்கட் சூளாமணியும்
வண்ண உரிவை யுடையும்
வளரும் பவளநிறமும்
அண்ணல் அரண்முர ணேறும்
அகலம் வளை[illegible] அரவும்

திண்ணல் கெடிலப் புனலும்
        உடையார் ஒருவர் தமர் நாம்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை
        அஞ்ச வருவதும் இல்லை.

௧௦

அங்கிங்கெனாதபடி எங்கும் ப்ரகாசமாய்,
        ஆனந்த பூர்த்தி யாகி,
அருளோடு நிறைந்ததெது? தன் அருள் வெளிக்குளே
        அகிலாண்ட கோடி எல்லாம்
தங்கும்படிக் கிச்சைவைத்து, உயிர்க்குயிராய்த்
        தழைத்ததெது? மனவாக்கினில்
தட்டாமல் நின்றதெது? சமய கோடிகளெலாம்
        தந்தெய்வம் எந்தெய்வம் என்று
எங்குந் தொடர்ந்து எதிர்வழக்கிடவும் நின்றதெது?
        எங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்ல ஒரு சித்தாகி இன்பமாய்
        என்றைக்கும் உள்ளதெது? மேல்
கங்குல்பகல் அறநின்ற எல்லை உளதெது? அது
        கருத்திற்கு இசைந்தது; அதுவே
கண்டன எலாம்; மோன உரு வெளியதாகவுங்
        கருதி, அஞ்சலி செய்குவாம்.

௧௧

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்—பரா சக்தி
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்.
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி—ஓம் சக்தி
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்.

1. கணபதி ராயன்—அவனிரு
காலைப் பிடித் திடுவோம்
குண முயர்ந் திடவே—விடுதலை
கூடி மகிழ்ந் திடவே. (ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்)

2. வெற்றி வடிவேலன்—அவனுடை
வீரத்தினைப் புகழ்வோம்;
சுற்றி நில்லாதே போ!—பகையே!
துள்ளி வருகுது வேல். (ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்)

3. பாம்புத் தலை மேலே—நடஞ் செயும்
பாதத்தினைப் புகழ் வோம்
மாம்பழ வாயினிலே—குழலிசை
வண்மை புகழ்ந்திடுவோம்.
(ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்)

4. செல்வத் திருமகளைத்—திடங்கொண்டு
சிந்தனை செய்திடுவோம்
செல்வ மெல்லாந் தருவாள்—நம தொளி
திக் கனைத்தும் பரவும். (ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்)

5. தாமரைப் பூவினிலே—சுருதியைத்
தனி யிருந் துரைப்பாள்
பூமணித் தாளினையே—கண்ணி லொற்றிப்
புண்ணிய மெய் திடு வோம்.
(ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்)

6. சொல்லுக் கடங்கா வே—பரா சக்தி
சூரத் தனங்க ளெல்லாம்;
வல்லமை தந்திடு வாள்—பரா சக்தி
வாழி யென்றே துதிப்போம்.
(ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்)

கஉ

1. தேடியுனைச் சரணடைந்தேன்,
தேச முத்து மாரி!
கேடதனை நீக்கிடுவாய்,
கேட்ட வரந் தருவாய்.

2. பாடியுனைச் சரணடைந்தேன்
பாச மெல்லாங் களைவாய்
கோடி நலஞ் செய்திடுவாய்,
குறைக ளெல்லாந் தீர்ப்பாய்.

3. எப்பொழுதுங் கவலையிலே
இணங்கி நிற்பான் பாவி;
ஒப்பி யுன தேவல் செய்வேன்
உன தருளால் வாழ்வேன்.

4. சக்தி யென்று நேரமெல்லாந்
தமிழ்க் கவிதை பாடி,
பக்தியுடன் போற்றி நின்றால்
பயமனைத்துந் தீரும்.

5. ஆதாரம் சக்தி யென்றே
அருமறைகள் கூறும்;
யாதானுந் தொழில் புரிவோம்;
யாது மவள் தொழிலாம்.

6. துன்பமே யியற்கை யெனும்
சொல்லை மறந்திடுவோம்;
இன்பமே வேண்டி நிற்போம்;
யாவு மவள் தருவாள்.

7. நம்பினர் கெடுவதில்லை;
நான்கு மறைத் தீர்ப்பு;
அம்பிகையைச் சரண்புகுந்தால்
அதிக வரம் பெறலாம்.

௧௩

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர் நற்சோதி மிக்க
உருவே யென்னுறவே யென்னூனே யூனின்
உள்ளமே யுள்ளத்தினுள்ளே நின்ற
கருவே யென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினை நோயடையா வண்ணம்
ஆவடு தண்டுறை யுறையும் அமரரேறே.

௧௪

1. ஆதிப் பரம்பொருளின் ஊக்கம்—அதை
அன்னை யெனப்பணிதல் ஆக்கம்;
சூதில்லை காணுமிந்த நாட்டீர்—மற்றத்
தொல்லை மதங்கள் செய்யுந் தூக்கம்.
2. மூலப் பழம்பொருளின் நாட்டம்—இந்த
மூன்று புவியுமதன் ஆட்டம்;
காலப் பெருங்களத்தின் மீதே—எங்கள்
காளி நடமுலகக் கூட்டம்.
3. காலை யிளவெயிலின் காட்சி—அவள்
கண்ணொளி காட்டுகின்ற மாட்சி;
நீல விசும்பினிடை யிரவிற்—சுடர்
நேமி யனைத்து மவளாட்சி.

4. நாரண னென்றுபழ வேதம்—சொல்லும்
நாயகன் சக்தி திருப்பாதம்;
சேரத் தவம் புரிந்து பெறுவார்—இங்கு
செல்வ மறிவு சிவபோதம்.

5. ஆதி சிவனுடைய சக்தி—எங்கள்
அன்னை யருள்பெறுதல் முக்தி;
மீதி யுயிரிருக்கும் போதே—அதை
வெல்லல் சுகத்தினுக்கு யுக்தி;

6. பண்டை விதியுடைய தேவி—வெள்ளை
பாரதி யன்னையருள் மேவி.
கண்ட பொருள் விளக்கும் நூல்கள்—பல
கற்ற லில்லாதவனோர் பாவி.

7. மூர்த்திகள் மூன்று பொருளொன்று;—அந்த
மூலப்பொருள் ஒளியின் குன்று;
நேர்த்தி திகழு மந்த வொளியை—எந்த
நேரமும் போற்று சக்தி யென்று.

௬௫

மெய் தானரும்பி விதிர்விதிர்த்துன்
விரையார் கழற்கென்
கைதான் றலை வைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி யுள்ளம்,
பொய்தான் றவிர்ந்துன்னைப் போற்றி
சய சய போற்றி யென்னும்,
கைதா னெகிழ விடே
னுடையா யென்னைக் கண்டு கொள்ளே.

கசு

தன் முகத்துச் சுட்டி தூங்கத் தூங்கத் தவழ்ந்து போய்
பொன்முகக் கிண்கிணி ஆர்ப்பப் புழுதி அளைகின்றான் ;
என்மகன் கோவிந்தன் கூத்தினை, இளமா மதி !
நின்முகம் கண் உளவாகில், நீ இங்கே நோக்கிப்போ.

கஎ

ராகம்—நாட்டைக்குறிஞ்சி. தாளம்—ஆதி.

பல்லவி

17. முருகா—முருகா—முருகா

சரணங்கள்

1. வருவாய் மயில் மீ தினிலே
வடிவே லுடனே வருவாய்
தருவாய் நலமுந் தகவும் புகழுந்
தவமுந் திறமுந் தனமுங் கனமும். (முருகா)

2. அடியார் பலரிங் குளரே
அவரை அறிவித் தருள்வாய்
முடியா மறையின் முடிவே ! அசுரர்
முடிவே கருதும் வடிவே லவனே ! (முருகா)

3. சுருதிப் பொருளே, வருக.
துணிவே, கனலே, வருக.
கருதிக் கருதிக் கவலைப் படுவார்
கவலைக் கடலைக் கடியும் வடிவேல். (முருகா)

4. அமரா வதிவாழ் வுறவே
அருள்வாய்! சரணம், சரணம்!
குமரா, பிணியா வையுமே சிதறக்
குமுறும் சுடர்வேலவனே, சரணம். (முருகா)

5. அறிவா கியகோ யிலிலே
அருளாகிய தாய் மடிமேல்
பொறிவே லுடனே வளர்வாய், அடியார்
புதுவாழ் வுறவே புவிமீ தருள்வாய். (முருகா)

6. குருவே, பரமன் மகனே,
குகையில் வளருங் கனலே
தருவாய் தொழிலும் பயனும், அமரர்
ஸமராதிப னே, சரணம் சரணம். (முருகா)

கஅ

கற்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ?
திருப்பவளச் செவ்வாய் தான் தித்தித்து இருக்குமோ?
மருப்பு ஒசித்த மாதவன் தன் வாய்ச் சுவையும் நாற்றமும்
விருப்புற்று கேட்கின்றேன் சொல் ஆழி வெண் சங்கே!

கக

ஆறு சுடர் முகங் கண்டு விழிக்
கின்ப மாகுதே—கையில்
அஞ் சலெனுங்கு றிகண்டு மகிழ்ச்சி
யுண்டாகுதே
நீறுபடக் கொடும்பாவம் பிணி பசி
யாவையும்—இங்கு
நீக்கி யடியரை நித்தமுங் காத்
திடும் வேலவா!

கூறுபடப் பலகோடி யவுணரின்
கூட்டத்தைக்—கண்டு
கொக்கரித் தண்டங்குலுங்க நகைத்
திடும் சேவலாய்!
மாறுபடப் பலவேறு வடிவோடு
தோன்றுவான்—எங்கள்
வைரவி பெற்ற பெருங்கனலே,
வடிவேலவா!

௨௦

கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பு அருளும் களிப்பே!
காணுர்க்கும் கண்டவர்க்கும் கண் அளிக்கும் கண்ணே!
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரம் அளிக்கும் வரமே!
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே!
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடு நின்ற நடுவே!
நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலம்கொடுக்கும் நலமே!
எல்லார்க்கும் பொதுவில் நட மிடுகின்ற சிவமே!
என் அரசே! யான் புகலும் இசையும் அணிந்தருளே!

௨௧

பாதிமதிநதி போது மணி சடை நாதனருளிய குமரேசா
பாகுகனிமொழி மாதுகுறமகள் பாதம் வருடிய மணவாளா
காதுமொருவிழி காகமுறவருள் மாயனரிதிரு மருகோனே
காலனெனை யணு காமலுனதிரு காலில் வழிபட அருள்
[வாயே
ஆதியயனொடு தேவர்சுரருல காளும் வகையுறு சிறைமீளா
ஆடுமயிலினி லேறியமரர்கள் சூழவரவரு மிளையோனே
சூதமிகவளர் சோலைமருவுசு வாமிமலை தனிலுறைவோனே
சூரனுடலற வாரி சுவறிட வேலைவிடவல பெருமாளே.

௨௨

அப்பனீ அம்மைநீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண் பொருளும் நீ
யொருகுலமுஞ் சுற்றமும் ஓரூரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவுந் தோற்றுவாய் நீ
துணையா யென்னெஞ்சந் துறப்பிப்பாய் நீ
இப்பொன்னீ இம்மணி நீ இம்முத்து நீ
இறைவனீ யேறூர்ந்த செல்வன் நீயே.

௨௩

புழுவாய்ப்பிறக்கினும் புண்ணியாஉன்னடி யென்
[மனத்தே
வழுவாதிருக்க வரந்தர வேண்டுமிவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய் பாதிரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை மேல் வைத்த
[தீ வண்ணனே

௨௪

மற்றுபற் றெனக்கின்றி நின்றிருப்
பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந் தேனினிப் பிற
வாத தன்மைவந் தெய்தினேன்
கற்றவர் தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்றவாவுனை நான் மறக்கினுஞ்
சொல்லு நாநமச் சிவாயவே.

உ௫

அன்றே எந்தன் ஆவியும் உடலும்
உடைமை எல்லாம்
குன்றே அனையாய் என்னை ஆட்கொண்ட
போதே கொண்டிலையோ
இன்று ஒரு இடையூறு எனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானே இதற்கு நாயகமே.

உ௬

அம்மையே அப்பா ஒப்பிலாமணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கென பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

உ௭

மாற்றறியாத செழும் பசும் பொன்னே
மாணிக்கமே சுடர் வண்ணக் கொழுந்தே
கூற்றறியாத பெருந்தவருள்ளக்
கோயிலிருந்த குணப் பெருங்குன்றே
வேற்றறியாத சிற்றம்பலக் கனியே
வித்தையில் வல்லவர் மெச்சும் விருந்தே
சாற்றறி யாத வென் சாற்றுங் களித்தாய்
தனி நடராஜ என் சற்குரு மணியே.

உஅ

மாதர்ப் பிறைக் கண்ணியானை
மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தோத்திப்
புகுவாரவர்பின் புகுவேன்
யாதும் சுவடு படாமல்
ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடும்
களிறு வருவன கண்டேன்
கண்டே னவர் திருப்பாதம்
கண்டறி யாதன கண்டேன்.

உகூ

நாமர்க்கும் குடி அல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலையில்லோம்
ஏமாப்போம் பிணி அறியோம் பணிவோம் அல்லோம்
இன்பமே என்னாளும் துன்பமில்லை
தாம் ஆர்க்கும்குடி யல்லாத்தன் மையான
சங்கரன் நற்சங்கவெண் குழைஓர்காதில்
கோமார்க்கே நாம் என்றும் மீளா ஆளாய்க்
கொய் மலர்ச்சே வடியிணையே குறுகினோமே.

ங௦

கல்லாப் பிழையுங் கருதாப் பிழையுங் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப்பிழையும்நின் ஐந்தெழுத்தைச்
சொல்லாப் பிழை யுந்துதியாப் பிழையுந் தொழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியே கம்பனே.

௬௧

துச்சாதனன் எழுந்தே—அன்னை
துகிலினை மன்றிடையுரித லுற்ருன்,
"அச்சோ, தேவர்களே!"—என்
றலறி யவ் விதுரனுந்தரை சாய்ந்தான்.
பிச்சேறி யவனைப் போல்—அந்தப்
பேயனுந் துகிலினை யுரிகையிலே
உட்சோதியிற் கலந்தாள்—அன்னை
உலகத்தை மறந்தாள் ஒருமையுற்ருள்.

"ஹரிஹரி, ஹரி என்ருள்—கண்ணா!
அபய மபயமுனக்கபய மென்ருள்.
கரியினுக் கருள் புரிந்தே—அன்று
கயத்திடை முதலையினுயிர் மடித்தாய்.
கரியநன்னிற முடையாய்,—அன்று
காளிங்கன் தலை மிசை நடம்புரிந்தாய்!
பெரியதோர் பொருளாவாய்—கண்ணா!
பேசரும் பழ மறைப் பொருளாவாய்!
சக்கரமேந்தி நின்ருய்—கண்ணா
சார்ங்க மென்ருெரு வில்லைக் கரத்துடையாய்,
அக்ஷரப் பொருளாவாய்—கண்ணா
அக்கார அமுதுண்ணும் பசுங்குழந்தாய்,
துக்கங்க ளழித்திடுவாய்—கண்ணா
தொண்டர் கண்ணீர்களைத் துடைத்திடுவாய்.
தக்கவர் தமைக் காப்பாய்—அந்தச்
சதுர்முக வேதனைப் படைத்துவிட்டாய்.
வானத்துள் வானாவாய்—தீ,
மண், நீர், காற்றினில் அவை யாவாய்,

மோனத்துள் வீழ்ந்திருப்பார்—தவ
முனிவர்தம் அகத்தினி லொளிர்தருவாய்
கானத்துப் பொய்கையிலே—தனிக்
கமலமென் பூமிசை வீற்றிருப்பாள்
தானத்து ஸ்ரீதேவி—அவள்
தாளிணை கைக்கொண்டு மகிழ்ந்திருப்பாய்
ஆதியிலாதியப்பா—கண்ணா
அறிவினைக் கடந்த விண்ணகப் பொருளே,
சோதிக்குச் சோதியப்பா—என்றன்
சொல்லினைக் கேட்டருள் செய்திடுவாய்
மாதிக்கு வெளியினிலே—நடு
வானத்திற் பறந்திடுங் கருடன் மிசை
சோதிக்குள் ஊர்ந்திடுவாய்—கண்ணா
சுடர்ப்பொருளே, பேரடற் பொருளே.
“ கம்பத்திலுள்ளானோ ?—அடா !
காட்டுன்றன் கடவுளைத் தூணி டத்தே !
வம்புரை செயுமூடா ”,—என்று
மகன் மிசை யுறுமியத் தூணுதைத்தான்,
செம்பவிர் குழலுடையான்—அந்தத்
தீயவல் லிரணிய னுடல் பிளந்தாய் !
நம்பிநின் னடி தொழுதேன்—என்னை
நாணழி யா திங்கு காத்தருள்வாய்.
வாக்கினுக் கீசனையும்—நின்றன்
வாக்கினி லசைத்திடும் வலிமையினாய்,
ஆக்கினை கரத் துடையாய்—என்றன்
அன்புடை யெந்தை, என்னருட்கடலே,
நோக்கினிற் கதிருடையாய்—இங்கு

தூற்றுவர் கொடுமையைத் தவிர்த்த தருள்வாய்
தேக்கு நல் வானமுதே—இங்கு
சிற்றிடை யாய்ச்சியின் வெண்ணையுண்டாய்
வையகங் காத்திடுவாய்—கண்ணு
மணி வண்ணு, என்றன் மனச்சுடரே,
ஐய, நின் பதமலரே—சரண்.
ஹரி, ஹரி, ஹரி, ஹரி!" என்ருள்.

பொய்யர் தந்துயரினைப் போல்—நல்ல
புண்ணிய வாளர் தம் புகழினைப்போல்,
தையலர் கருணையைப் போல்—கடல்
சலசலத்தெறிந்திடும் அலைகளைப் போல்,
பெண்ணொளி வாழ்த்திடுவார்—அந்தப்
பெரு மக்கள் செல்வத்தின் பெருகுதல் போல்
கண்ணபிரானருளால்—தம்பி
கழற்றிடக் கடற்றிடத் துணி புதிதாய்
வண்ணப் பொற் சேலைகளாம்—அவை
வளர்ந்தன, வளர்ந்தன, வளர்ந்தனவே!

௩௨

பல்லவி

பித்தந்தெளிய மருந் தொன் றிருக்குது
பேரின்ப மன்றுள்ளே (பித்தந்)

அனுபல்லவி

மற்ற மருந்துகள் தின்ருலும் உள்ளுக்கு
வல்லே வல்லே ஐயே அடிமை (பித்தந்)

சரணம்

பாம்பும் புலியும் மெய்ப் பாடுபட்டுத்தேடிப்
பார்த்துப் பயிரிட்டது
பாரளந்த திரு மாயனும் வேதனும்
பார்த்துக் களித்த துண்டு
பார்ப்பதி யென்ெெரு சீமாட்டியதில்
பாதியைத் தின்றதுண்டு இன்னும்
பாதி இருக்குது பறையா நீயும் போய்ப்
பாரேன் றுத்தரந் தாரும் தாரும் (பித்தம்)

ரு.ரு.

பல்லவி

பகைவனுக்கருள் வாய்—நன்னெஞ்சே
பகைவனுக் கருள்வாய்

சரணம்

புகை நடுவினில் தீயிருப்பதைப்
பூமியிற் கண்டோமே—நன்னெஞ்சே
பூமியிற் கண்டோமே
பகை நடுவினில் அன்புருவான நம்
பரமன் வாழ்கின்ருன்—நன்னெஞ்சே
பரமன் வாழ்கின்ருன். (பகை)

சிப்பியிலே நல்லமுத்து விளைந்திடுஞ்
செய்தி யறியாயோ—நன்னெஞ்சே
குப்பையிலே மலர் கொஞ்சுங் குருக்கத்திக்
கொடி வளராதோ—நன்னெஞ்சே

உள்ள நிறைவி லோர் கள்ளம் புகுந்திடில்
உள்ளம் நிறைவாமோ? நன்னெஞ்சே
தெள்ளிய தேனிலோர் சிறிது நஞ்சையும்
சேர்த்தபின் தேனுமோ?—நன்னெஞ்சே (பகை)

வாழ்வை நினைத்தபின் தாழ்வை நனைப்பது
வாழ்வுக்கு நேராமோ?—நன்னெஞ்சே
தாழ்வு பிறர்க்கெண்ணத் தானழிவானென்ற
சாத்திரங் கேளாயோ?—நன்னெஞ்சே. (பகை)

போருக்கு வந்தங் கெதிர்த்த கவுரவர்
போல வந்தேனுமவன்—நன்னெஞ்சே
நேருக் கருச்சுனன் தேரிற் கசை கொண்டு
நின்றதுங் கண்ணனன்றோ?—நன்னெஞ்சே. (பகை)

தின்னவரும் புலிதன்னையு மன்பொடு
சிந்தையிற் போற்றிடுவாய்—நன்னெஞ்சே
அன்னை பராசக்தி யவ்வுரு வாயினள்
அவளைக் கும்பிடுவாய்—நன்னெஞ்சே. (பகை)

ராகம்—பைரவி. தாளம்—ஆதி.

௩௪

## பல்லவி

தாயே ஏழைபால் தயை செய்வாயே அம்பா
தயாபரி சங்கரி ஸகல லோக நாயகி (தாயே)

## அனுபல்லவி

நாயேன் உன்பாலன்றி எங்கே செல்வேன்
நளின மிருதுள ஸுகுமார மனோஹர
சரண யுகள மருளத்தருண மிதுவே என் (தாயே)

### சரணம்

எண்ணாத எண்ண மெல்லாம் எண்ணி எண்ணி
எட்டாத பேராசைக் கோட்டை கட்டி
புண்ணாக நெஞ்சம் புலம்பும் மடம்
போதும் இனி முடியாது உனதடிப்
போது அடைய இது போது வரமளித் (தாயே)

ராகம்—பியாகடை. தாளம்—சாபு

௩௫

### பல்லவி

எத்தனைதரம் சொன்னாலும் தித்திக்கும் உன்றன் நாமம்
என்றன் புகலிடமே. (எத்தனை)

### அனுபல்லவி

சுத்த அருள் ஒளியாய் துலங்கும் சிவகுமாரா
பத்தரை மாற்றுப் பொன்னைப் பழிக்கும் வடிவுடையாய்
(எத்தனை)

### சரணம்

அத்தை திருமகளும் அன்னை மலைமகளும்
சித்த மகிழக் கூவிச் செவியமுதுண்ணும் நாமம்
தத்தை மொழி வள்ளி நித்திரையிலும் சொல்லித்
தான் மகிழ்ந்திடு நாமம் தேன்நிகர் திருநாமம் (எத்தனை)

தேவர் துயர் தீர தினந்துதித்திடும் நாமம்
தேவ யானை யென்றும் திருவுளங் கொள்ளும் நாமம்
பாவலர் இன்னிசையால் பாடிப் பரவும் நாமம்
பரகதி யடையவே பரிந்தருள் செய்யும் நாமம் (எத்தனை)

ராகம்—காம்போதி. தாளம்—ஆதி.

உஜ்ஜயினீ ! நித்ய கல்யாணீ !
ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி (உஜ்ஜயினி)
உஜ்ஜய காரண சங்கர தேவி
உமா ஸரஸ்வதீ ஸ்ரீ மாதா ஸா. (உஜ்ஜயினி)
வாழி புனைந்து மஹேசுவர தேவன்,
தோழி, பதங்கள் பணிந்து துணிந்தனம். (உஜ்ஜயினி)
ஸத்ய யுகத்தை அகத்தி லிருத்தி
திறத்தை நமக்கருளிச் செய்யும் உத்தமி (உஜ்ஜயினி)

## வாழ்த்து

வாழ்க நீ ! எம்மான், இந்த
வையத்து நாட்டிலெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந்தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மஹாத்மா ! நீ வாழ்க ! வாழ்க !
வாழிய செந்தமிழ் ! வாழ்க நற் றமிழர் !
வாழிய பாரத மணித் திருநாடு !
இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க !
நன்மை வந் தெய்துக ! தீதெலாம் நலிக !
அறம் வளர்ந்திடுக ! மற மடி வுறுக !
ஆரிய நாட்டினர் ஆண்மையோ டியற்றுஞ்
சீரிய முயற்சிகள் சிறந்துமிக் கோங்குக !
நந் தேயத்தினர் நாடொறும் உயர்க !
வந்தே மாதரம் ! வந்தே மாதரம் !

## நாமாவளி

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே,
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே,
கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் முகம் ஒன்றே,
குன்று உருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே,
வள்ளியை மணம்புணர வந்த முகம் ஒன்றே,
ஆறுமுகம் ஆனபொருள் நீ அருளல் வேண்டும்,
ஆதி அருணசலம் அமர்ந்த பெருமாளே !

ஊதூது சங்கே ஊதூது சங்கே
ஊதூது சங்கே ஊதூது சங்கே
கைவிட மாட்டானென் றூதூது சங்கே
கனகசபையா னென்றூதூது சங்கே.
பொய் விடச் செய்தானென் றூதூது சங்கே
பூஜை பலித்ததென் றூதூது சங்கே
பொன்னடி தந்தா னென்றூதூது சங்கே
பொன்னம் பலத்தா னென்றூதூது சங்கே
இன்னலறுத்தானென் றூதூது சங்கே
என்னுள் அமர்ந்தானென் றூதூது சங்கே.

१. रघुपति-राघव राजाराम।
पतित-पावन सीताराम ॥
भजमन प्यारे राम रहीम।
भजमन प्यारे कृष्ण करीम ॥
ईश्वर अल्ला तेरे नाम।
सबको सम्मति दे भगवान् ॥

२. श्रीराम, जय राम, जय जय राम।
जय राम, जय राम, जय जय राम ॥

३. हरे राम, हरे राम, हरे राम, हरे।
भज मन निशि-दिन प्यारे ॥

४. राजाराम राम राम।
सीताराम राम राम ॥

५. श्रीकृष्ण गोविन्द हरे मुरारे।
हे नाथ नारायण वासुदेव ॥

६. नारायण नारायण जय गोविन्द हरे।
नारायण नारायण जय गोपाल हरे ॥

७. हरे राम, हरे राम राम राम हरे हरे।
हरे कृष्ण, हरे कृष्ण, कृष्ण कृष्ण, हरे हरे।

1. ரகுபதி ராகவ ராஜா ராம் |
பதித பாவன ஸீதாராம் ||
பஜமன ப்யாரே ராம ரஹீம் |
பஜமன ப்யாரே கிருஷ்ண கரீம் ||
ஈச்வர அல்லா தேரே நாம் |
ஸப்கோ ஸன்மதி தே பகவான் ||

2. ஸ்ரீ ராம ஜய ராம ஜய ஜயராம |
ஜய ராம ஜய ராம ஜய ஜயராம ||

3. ஹரே ராம ஹரே ராம ஹரே ராம ஹரே |
பஜமன நிஶிதின ப்யாரே ||

4. ராஜா ராம் ராம் ராம் |
ஸீதாராம் ராம் ராம் ||

5. ஸ்ரீ கிருஷ்ண கோவிந்த ஹரே முராரே |
ஹேநாத நாராயண வாஸுதேவா ||

6. நாராயண, நாராயண ஜய கோவிந்த ஹரே |
நாராயண நாராயண ஜய கோபால ஹரே ||

7. ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே |
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே.

## கொடி வணக்கம்

(தாயுமானவர் ஆனந்தக் களிப்பு வர்ணமெட்டு)

### பல்லவி

தாயின் மணிக்கொடி பாரீர்!—அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்! (தா)

### சரணங்கள்

1. ஓங்கி வளர்ந்த தோர் கம்பம்—அதன்
உச்சியின் மேல் மூன்று வர்ணங்களோடே
பாங்கி னறவாழி திகழும்—செய்ய
பட்டொளி வீசிப் பறந்தது பாரீர் (தாயின்)

2. பட்டுத்துகிலென லாமோ ?—அதிற்
பாய்ந்து சுழற்றும் பெரும் புயற் காற்று
மட்டு மிகுந்தடித்தாலும்—அதை
மதியாதவ் வுறுதி கொள் மாணிக்கப்படலம் (தா)

3. கம்பத்தின் கீழ் நிற்றல் காணீர்—எங்கும்
காணரும் வீரர் பெருந்திருக் கூட்டம்
நம்பற் குரிய ரவ்வீரர்; தங்கள்
நல்லுயி ரீந்துங் கொடியினைக் காப்பர் (தா)

4. அணியணி யாயவர் நிற்கும்—இந்த
ஆரியக் காட்சியோ ரானந்தமன்றோ ?
பணிகள் பொருந்திய மார்பும்—விறற்
பைந்திரு வோங்கும் வடிவமுங் காணீர் (தாயின்)

5. செந்தமிழ் நாட்டுப் பொருநா—கொடுந்
தீக்கண் மறவர்கள், சேரன்றன் வீரர்,
சிந்தை துணிந்த தெலுங்கர்,—தாயின்
சேவடிக்கே பணி செய்திடு துளுவர், (தா)

6. கன்னட ரெட்டிய ரோடு,—போரிற்
காலனு மஞ்சக் கலக்கு மராட்டர்,
பொன்னகர்த் தேவர் களொப்ப—நிற்கும்
பொற்படை யாரிந்து ஸ்தானத்து மல்லர் (தா)

7. பூதல முற்றிடும் வரையும்—அறப்
போர் விறல் யாவும் மறப் புறும் வரையும்
மாதர்கள் கற்புள்ள வரையும்—பாரில்
மறைவரும் கீர்த்திகொள் ரஜபுத்ர வீரர் (தா)

8. சேர்ந்ததைக் காப்பது காணீர்! அவர்
சிந்தையின் வீரம் நிரந்தரம் வாழ்க,
தேர்ந்தவர் போற்றும் பரத—நிலத்
தேவி துவஜம் சிறப்புற வாழ்க. (தாயின்)

## நடை கீதம்

1. அன்பே பிரதானம்—சகோதரர் (அன்பே பிரதானம்)
பண்புறு ஞானம் பரம நம்பிக்கை
அன்பு விச்வாசம் இவைகளிலெல்லாம் (அன்)

பல பல் பாஷை படித்தறிந்தாலும்
கலகலவென்னும் கை மணியாமே (அன்பே)

துணிவுடன் உடலை சுடர் கொடுத்தாலும்
பணி ஒன்றல்லால் பயனதில் இல்லை (அன்பே)

எண் பொருள்யாவும் ஈன்றளித்தாலும்
அன்பில்லையானல் அதிற் பயனில்லை (அன்பே)

சாந்தமும் தயவும் சகல நற்குணமும்
போந்த சத்தியமும் பொறுமையு முள்ள (அன்பே)

சினமடையாது தீங்கு ஒண்ணுது
தினமழியாது தீமை செய்யாத (அன்பே)

புகழிறுமாப்பு பொழிவு பொருமை
பகையனியாயம் பாவமும் செய்யா (அன்பே)

சகலமும் தாங்கும் சகலமும் நம்பும்
மிகைபட வெங்கும் மேன்மை பெற்றோங்கும் (அன்)

2. தொண்டு செய்வோம் அன்பு கொண்டு செய்வோம்
சுத்த சுதந்திரராய் தொண்டு செய்வோம்.

வீடுதோறும் கலை ஆக்கிடுவோம்—நம்
வீடுதோறும் தொழில் வளம் பெருக்கிடுவோம்
நாடுதோறும் ஒற்றுமையை நாட்டிடுவோம்—பொது
நன்மைகளைச் செய்திடுவோம் பாட்டுடனே. (தொ)

பாரெல்லாம் கோவிலெனப் பரவிடுவோம்—நம்
பணியினை போகமெனப் பயின்றிடுவோம்
ஊரெல்லாம் சிற்றுலகம் ஆக்கிடுவோம்—நம்
உள்ளமெலாம் தெய்வ ஒளி ஊக்கிடுவோம் (தொ)

3. எத்தனை ஜன்மங்கள் வந்து பிறந்தாலும்
இந்திய மண்ணிடை வேண்டுவனே.

சத்திய ஆர்வமும் நித்திய சேவையும்
சாகஸ வாழ்க்கையும் வேண்டுவனே.

பித்தனுய் மாறியே தொண்டுகள் செய்திடும்
பெருமையாம் வாழ்க்கையை வேண்டுவனே.

ஏழை எளியவர் எங்கள் நன்னுட்டிலே
என்றும் பசியாற வேண்டுவனே.

கோழைகளில்லாமல் வீரத் தொழில் செய்யும்
கூட்டமிந் நாட்டிலே வேண்டுவனே.

தேசம் அழைத்திடின் பாசம் களைந்திடும்
தெய்வீக நல்லருள் வேண்டுவனே.

நீசம் அகன்றிட நீதி துலங்கிட
நேர்மையாய்த் தொண்டுகளாற்றுவனே.

முப்பது கோடிக்கு நன்மைகள் செய்வதே
முக்தி நிலை என்று சாற்றுவனே.

இப்பணி செய்வதில் எவ்வகைத் துயரமும்
ஏற்றிடு வேனிது சத்தியமே.

# I

## பிரார்த்தனை

### (மகாத்மாஜீ.)

ஆசிரமத்திற்கு எது அஸ்திவாரமோ அதன் முக்கியமான பகுதி பிரார்த்தனையாகையால் நாம் இதை நன்கு புரிந்து கொள்ளவேண்டும். மனப்பூர்வமாக செய்யப்படாத பிரார்த்தனையெல்லாம் வீணே.

உணவருந்துவதைவிட பிரார்த்தனை புரிவது கோடி மடங்கு அதிகப் பயனுடைத்து. உணவை நிறுத்தி விட்ட போதிலும் பிரார்த்தனையை மட்டும் ஒரு பொழுதும் நிறுத்தக் கூடாது. பிரார்த்தனை நின்று விடுவதனால் மனிதனுக்கு மிகுந்த வேதனை தோன்றவேண்டும். பல சமயங்களில் உணவை நிறுத்துவதனால் உடம்புக்கு நன்மை விளைகிறது. பிரார்த்தனை நின்று விடுவதனால் ஒரு பொழுதும் நன்மை உண்டாவதற்கில்லை.

பிரார்த்தனையில் ஓதப்படுபவை எல்லாவற்றிற்கும் அனைவரும் விரைவில் பொருளைத் தெரிந்து கொள்ள வேண்டும். மூல பாஷை தெரியாவிட்டாலும் அதன் பொருளைத் தெரிந்து கொண்டு அதை சிந்திக்க வேண்டும்.

நான் பிரார்த்தனைக்கு மகத்துவம் அளிப்பதற்குக் காரணம் நான் எல்லாவற்றிலும் உயர்ந்த ஒரு சக்தியில் நம்பிக்கை கொண்டிருப்பதே. வாழ்வு என்பது ஒரு வெறும் சம்பவமல்ல. பிறப்பும், இறப்பும்

கடவுள் அளிப்பவை. நாம் அல்லும் பகலும் அனவரதமும் கடவுளைக் குறித்து நினைத்துக் கொண்டேயிருக்க முடியுமானால் மிகவும் நல்லதே. ஆனால் இது சாத்திய மில்லாதிருப்பதால் பிரதி தினமும் சிலமணி நேரமாவது அவரை நினைக்கவேண்டும். நாம் தினந் தோறும் கடவுளுடைய கருணைக்கு நன்றி செலுத்தத் தவறினோமானால் நம் வாழ்வே பொருளற்றதாகி விடுகிறது. உடலுக்கு உணவு அளியாமலே நாம் சிறிது காலம் வேலை செய்வது சாத்தியம். ஆனால் ஆத்மாவின் உணவான பிரார்த்தனையின் விஷயத்தில் அசட்டை செய்தல் தகாது. நாம் பிறர் ஒருவரிடம் கைநீட்டிப் பிச்சை கேட்பது சரியல்ல. ஆனால் கடவுளிடம் கைநீட்டுவதில் வெட்கப் படுவதற்கு ஒன்றுமில்லை.

பிரார்த்தனையில் கலந்து கொள்வதின் கருத்து கடவுளுடன் சம்பாஷிப்பதும் ஆத்ம சுத்தியின் பொருட்டு தெய்வீக ஒளியைப் பெறுவதுமே. கடவுளின் உதவி கொண்டு நம்மிடமுள்ள குறைகளைக் களைவது அப்பொழுது சாத்தியமாகிறது.

பிரார்த்தனை செய்பவன் ஒரு விஷயத்தை நினைவிலிருத்திக் கொள்ளவேண்டும். அதாவது, மாசு படிந்த மனத்துடன் செய்யும் பிரார்த்தனையினால் பயன் ஏதுமில்லை.

கோஷ்டி பஜனையின் நோக்கமும், தனி மனிதனுக்கு நன்மை செய்வதே யாகும். தனி மனிதன்

தன் உண்மை ஸ்வரூபத்தை உணரவும் மனத்தூய்மை பெறவும் கோஷ்டி பஜனை உதவுகிறது.

பிரார்த்தனையில் நிர்ப்பந்தத்திற்கே இடமில்லை. தானுக விரும்பி உள்ளத்தினுள்ளிருந்து எழுவ தொன்றையே பிரார்த்தனை யெனத் தகும்.

"ஆசிரமப் பிரார்த்தனை" என்ற தொகுப்பு பல விடங்களிலும் பரவிவிட்டது. அது தானுகவே வளர்ந்து பெருகிய வஸ்து; வேண்டுமென்றே ஒரு வரோ, பலரோ தொகுத்ததல்ல. அதில் உள்ள சுலோ கங்கள் பாடல்கள் ஆகியவை ஒவ்வொன்றும் சேர்ந்த தற்கு தனித்தனி வரலாறுண்டு.

1935-ல் சில ஜப்பானிய சந்நியாசிகள் மகன் வாடியில் (வர்தா) என்னுடன் வந்து தங்கினுர்கள். ஜப்பானுடன் போர் மூண்டவுடனே அவர்கள் சிறை யிடப்பட்டார்கள். அவர்கள் பிரதி தினமும் காலை மாலை நேரங்களில் தங்கள் பறைகளை முழக்கி நடந்து கொண்டே தம் பிரார்த்தனையைச் செய்வது வழக்கம். ஆசிரமத்தின் மாலைப் பிரார்த்தனை அவர்களுடைய நித்திய ஜபமந்திரத்துடன் தொடங்கப்பட்டு வந்தது. அந்த மந்திரம் "நம்யோ ஹோா ரேங்கே க்யோ" அதாவது "ஸத்தர்மத்தை நடத்தியவராம், எல்லை யிலா ஒளி பொருந்திய புத்த பகவானுக்கு வணக்கம்," என்பதாகும். எனக்கு இந்த மந்திரம் சாது கேசோவினது தூய்மை, ஏகாக்கிர பக்தி ஆகிய

வற்றிற்கு அறிகுறியாகும். ஆகவே இதில் விசேஷ சக்தி பொதிந்துள்ளது.

ஸேவாகிராம ஆசிரம பிரார்த்தனையில் சகோதரி ரைஹானாவின் விருப்பம், முயற்சி ஆகியவற்றின் விளைவாக குரானிலிருந்து நமாஜின் முக்கியமான பகுதியான சில பதங்கள் தினமும் ஓதப்படுகின்றன.

ஆகாகான் சிறையில் என் உபவாஸத்தினிடையில் டாக்டர் கில்டர் என்னிடம் அனுப்பப்பட்டார். அவர் நான் விடுதலையான வரையில் என்னுடனிருந்தார். நான் உபவாஸத்தை நிறுத்திய சமயத்தில் அவர் ஒரு பதம் படித்தார். அப்பொழுது முதல் அந்தப் பதமும் பிரார்த்தனையில் இடம் பெற்று விட்டது.

என் பிரார்த்தனையில் கலந்து கொள்ள வருகிறவர்களெல்லாம் இதை ஒரு பொழுது போக்காகக் கருதி வருகிறவர்களாய் இரார் என்று நான் எதிர்பார்க்கிறேன். அவர்கள் கடவுளை நினைப்பதற்காகவே வருகிறார்கள். பிரார்த்தனையின் மூலமாக கடவுள் தமக்கு அளித்துள்ள வேலையை நிறைவேற்ற முயலுகிறார்கள்.

அடிமை வாழ்வு மனிதனுடைய கௌரவத்திற்குப் பொருந்தாததாகும். ஹிருதயபூர்வமாக பிரார்த்தனை செய்பவன் அடிமை வாழ்வை ஏற்கவே மாட்டான்.

---

## II

# பிரார்த்தனையின் அவசியம்

பிரார்த்தனைதான் என்னைக் காப்பாற்றிவருகிறது. அது இல்லாமலிருந்தால் பல வருடங்களுக்கு முன்னமேயே எனக்குப் பைத்தியம் பிடித்திருக்கும். எனது 'சத்திய சோதனை'யைப் படித்தால் உங்களுக்கு இது நன்ருய்த் தெரியவரும். சொந்த முறையிலும் பொது ஜன ஊழியன் என்ற முறையிலும் நான் கடுமையான கஷ்டங்களை அனுபவிக்க நேரிட்டதை நீங்கள் அறியலாம். அவ்வப்போது திடீர் திடீரென்று ஏக்கம் பிடிக்கும். அப்போதெல்லாம் பிரார்த்தனை செய்வேன். எனது ஏக்கம் பறந்துபோய்விடும். ஆனல் சத்தியத்தை நான் எவ்வளவு எனது வாழ்க்கையில் கொண்டிருக்கின்றேனே அவ்வளவு தூரம் பிரார்த்தனையை நான் கொள்ளவில்லை. பிரார்த்தனை செய்வது ஓர் அவசியமாக எனக்கு ஏற்பட்டிருக்கிறது.

பிரார்த்தனை செய்யச் செய்ய கடவுள் பக்தி அதிகமாயிற்று. ஆதலால் பிரார்த்தனை செய்வதில் ஒரு ஆசையும் ஆனந்தமும் ஏற்படத் தொடங்கிற்று. பிரார்த்தனை இல்லாதபொழுது உயிர் வாழ்வதே ரசமற்றுப் போயிற்று. தென்னுப்பிரிக்காவில் கிறிஸ்தவக் கோயில்களின் பிரார்த்தனைகளுக்கு நான் சென்றிருக்கின்றேன். ஆனல் எனக்கு அப்போது அதில் பிடித்தமேற்படவில்லை. பிரார்த்

தனையில் கலந்து கொள்ளவில்லை. கடவுளை அவர்கள் வளைத்துக் கொண்டிருந்தார்கள். அது என்னால் முடியாத காரியமாயிருந்தது.

கடவுளிடத்தில் முதலில் எனக்குப் போதிய நம்பிக்கை யில்லாதிருந்ததால், அவரைக் குறித்த பிரார்த்தனை முதலியவைகளிலும் நான் அவநம்பிக்கை கொண்டிருந்தவன். ஆதலால் நான் தோற்றுப் போனேன். வாழ்வில் ஏதும் ருசியில்லாமலே யிருந்தது.

பிறகுதான் அறிந்து கொண்டேன். உடலுக்கு எவ்வாறு உணவு அவசியமோ அவ்வாறே ஆத்மா வுக்குப் பிரார்த்தனை அவசியமென அறிந்தேன். ஆனால் உடலுக்கு உணவைவிட ஆத்மாவுக்குப் பிரார்த் தனை கட்டாயம் வேண்டும் என்பது இப்போது தெரிகிறது. தேகத்தை ஆரோக்கியமாக வைத்திருப் பதற்கு அவ்வப்போது பட்டினி போடவேண்டிய தவசியம். அதேமாதிரி ஆத்மாவைப் பட்டினி போடலாமா? ஆத்மாவை ஒருக்காலும் பட்டினி போடக்கூடாது என்பது விளங்குகின்றது. புத்தர், ஏசுநாதர், முகம்மது நபி முதலிய பெரியோர் பிரார்த் தனையினால் தாம் முன்னேறியதாகக் கூறியிருக்கிறார் கள். பிரார்த்தனையின்றி உயிர்வாழ முடியாதெனவும் கூறியிருக்கிறார்கள்.

இப்போது கோடிக்கணக்கான இந்துக்களும் முஸல்மான்களும், கிறிஸ்தவர்களும் பிரார்த்தனை

செய்தே கவலையை நீக்கிக்கொள்கிறார்கள். அவர்களைப் பொய்யர்களென்றும், ஏமாந்தவர்களென்றும் சிலர் கூறுகின்றனர். ஆனால் இந்தப் 'பொய்' தான் எனது உயிருக்கு இன்றியமையாததாக இருக்கிறது. சத்திய உபாசகனான எனக்கு உயிர் போன்றுள்ள பிரார்த்தனை பொய் ஆகுமா ?

ராஜீய வானத்தில் ஏக்கமென்னும் மேகம் சூழும் போதும் எனது மனச் சமாதானத்தை நான் இழப்பதில்லை. என்து சமாதானத்தைக் கண்டு அநேகர் வியந்ததுண்டு. அந்த சமாதானம் எங்கிருந்து வருகிறது? பிரார்த்தனையிலிருந்து தான். நான் படித்தவனல்ல; நான் வெறும் பிரார்த்தனைக்காரனென்று தாழ்மையோடு சொல்லிக் கொள்கிறேன். அவரவர் மனோதர்மப்படி பிரார்த்தனை நடத்தலாம் என்பது எனது அபிப்பிராயம். ஆனால் நமது முன்னோர்கள் நடந்துசென்ற பழைய பாதையில் நாமும் செல்வது சுலபமெனத் தோன்றுகிறது.

கடவுளிடத்தில் நம்பிக்கை தோன்றுமாறு பிறருக்குப் போதனை செய்ய நான் அறியேன். சிலவற்றைக் கண்கூடாகக் காட்டமுடியும்; சில தானே விளக்கமாகும்; சிலவற்றை ஒருபோதும் காட்ட முடியாது. க்ஷேத்திர கணித சாஸ்திரத்தில் அடிப்படையான அம்சங்கள் சில உண்டு. அதே போல கடவுளின் சக்தியும் அடிப்படையான ஓர் உண்மை. மனித இதயத்தின் சக்தியைக் கொண்டு அவனை அறிய முடியாமலிருக்கும்.

அறிவினுல் ஆண்டவனை அறிவதைப் பற்றி பேசவே இடமில்லை. எங்கும் உறையும் இறைவனை உணருவதற்குப் பிரத்தியக்ஷப் பிரமாணம் கொடுப்பது எவ்வாறு முடியாதோ அம்மாதிரியே அறிவினுலும் ஆண்டவனை அளக்க முடியாது. ஏனெனில் அவர் காரணங்களையும் காரியங்களையும் கடந்தவர்.

'கடவுள் உளர்' என்று மெய்பிக்க ஏதேதோ சொல்லுகிருர்கள். ஆனுல் அந்த மாதிரி காரணம் கூறி கடவுளை நிர்ணயிப்பதனுல் உலகோரின் அறிவை அவமானப்படுத்த நான் விரும்பவில்லை. ஆனுல் ஓர் சிறு குழந்தை எவ்வாறு தாயினிடம் நடந்து கொள்ளுமோ அதேமாதிரி பகவானிடத்தில் திட நம்பிக்கையோடு நான் வாழ்கின்றேன். நானிருப்பது உண்மையானுல் என்னைப் படைத்த பகவானும் இருக்கின்ருர் என்பது எனது உறுதி. உலகில் கோடிக் கணக்கானவர்களுக்கும் இதே மாதிரி உறுதி உண்டு. பகவானை வர்ணிக்கவோ, அவரது அனந்த கல்யாண குணங்களை விவரிக்கவோ, எல்லோராலும் முடியாமலிருக்கலாம். ஆனுல் அவர்களுடைய வாழ்க்கையை கூர்ந்து நோக்கினுல் பகவத் பக்தி அதில் ஊடுருவி ஓடுவதை ஒவ்வொரு செய்கையிலும் காணலாம்.

நம்முடைய நம்பிக்கைய்யை மூடியிருக்கும் மாயையைத் தொலைக்க வேண்டும். அதாவது நமக்கு ஆண்டவனிடத்தில் நம்பிக்கை ஏற்படவேண்டுமானுல் நாம் இதுவரை உலகில் படித்துள்ள பலவிதமான

படிப்புக்களை மறந்துவிட வேண்டும்; அவை நமது அறிவை மயக்கி வழிதெரியாத இடத்தில் கொண்டு போயிருக்கின்றன. இப்போதைய படிப்பை மறந்தால் நமக்கு வழி தானே புலனாகும். மெய்யடக்கத்தோடும் நமக்கு ஒன்றும் தெரியாது என்ற எண்ணத்தோடும், ஒரு நம்பிக்கையோடும் நாம் தொடங்கவேண்டும். அகண்டமான இந்த அண்டகோளத்தில் மனிதப் பிறவி எடுத்த நாம் அணுவினும் கேவலமாக வாழ்ந்து வருகின்றோமல்லவா?

அணுவாவது அதற்கிடப்பட்டுள்ள சட்டப்படி நடக்கும். நாம் இயற்கையை எதிர்ப்பவர்களாதலால் இன்னும் கேவல மானவர்களாக வாழ்கின்றோம். ஆனால் நம்பிக்கை இழந்தவர்களுக்கு நான் ஒன்றும் சொல்ல முயலவில்லை.

கடவுளை நம்புவோர் பிரார்த்தனை செய்ய வேண்டும். பிரார்த்தனை அத்யாவசியம். நமது வாழ்க்கை முழுதுமே பிரார்த்தனை. அவ்வப்போது பகவத் பக்தியை அதிகமாக்கிக் கொள்வதற்காகவே குறிப்பிட்ட நேரங்களில் குறிப்பிட்ட விதத்தில் பெரியோர் பிரார்த்தனை செய்து வந்தனர். பிரார்த்தனையினால் நமது வாழ்வில் ஏற்படும் கஷ்டம் என்னும் மாயையினின்று நாம் விடுபடுவோமென நான் உறுதி கூறுகின்றேன்.

III

## பிரார்த்தனையின் விளக்கம்

சபர்மதி சத்யாக்கிரக ஆசிரமத்தில் கூடிய குஜராத் மாணவரில்லத்தைச் சேர்ந்த மாணவர் சம்மேளனம் அல்லது சிறுவர் மகா நாட்டில், காந்திஜி பிரார்த்தனையைப் பற்றி ஒரு விரிவுரை ஆற்றினார். அது பின்வருமாறு :—

### பொருள்

பிரார்த்தனை யென்பதன் பொருள் என்ன, ஏன் பிரார்த்தனை செய்யவேண்டும், என்பதைப் பற்றி நான் பேச வேண்டுமென்று விரும்புகிறீர்கள். இது எனக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது. சமயத்தின் உயிர் நாடியாகவும் அதன் சாராம்சமாக வும் பிரார்த்தனை இருக்கிறதென்று நான் நம்பு கிறேன். ஆதலால் பிரார்த்தனை என்பது மனித வாழ்க்கைக்கு உயிராய் அமையவேண்டும். மதம் இன்றி எந்த மனிதனும் வாழமுடியாது. எங்களுக்கு மதம் தேவையில்லை என்று அறிவின் மமதையினால் சிலர் கூறுகிறார்கள். இது நான் சுவாசிக்கிறேன், ஆனால் எனக்கு மூக்கு இல்லை என்று ஒருவன் சொல்வதைப் போலவே இருக்கிறது. அறிவினாலோ இயற்கை உணர்ச்சியினாலோ, மூட நம்பிக்கையினாலோ தெய்விக சக்தியோடு ஏதோ ஒருவகைத் தொடர்பு இருக்கிற

தென்பதை மனிதன் ஒப்புக்கொள்கிறுன். தீவிரமாக, கடவுள் இல்லை என்று மறுக்கும் நாஸ்திகன் கூட வாழ்க்கையில் ஒரு ஒழுக்கம் வேண்டியது தான் என் பதை ஏற்றுக்கொள்ளுகிறுன்; ஒழுங்கு நெறியிலே நடக்கும்போது அதில் ஏதோ நன்மை யிருக்கிற தென்றும் உணர்கிறுன். பிராட்லா என்பவர் பெரிய நாஸ்திகர் என்பது பிரசித்தம். தமது உள்ளுணர்ச்சி யிலெழுந்த எண்ணங்களை வெளியிடுவதென்று அவர் எப்போதும் பிடிவாதம் பிடித்தவர். இவ்விதம் உண்மை பேசியதற்காக அவர் எவ்வளவோ துன்புற நேர்ந்தது; ஆனால் அப்படித் துன்புறுவதிலேயே அவ ருக்கு ஓர் ஆனந்தம் இருந்தது. உண்மையைக் கடைப்பிடித்து நடப்பதற்குக் கிடைக்கும் பரிசு உண்மையேயாகும் என்று அவர் சொல்லுவது வழக் கம். உண்மையைக் கடைப்பிடித்து ஒழுகுவதனுல் உண்டாகிற ஆனந்தத்தை அவர் முற்றிலும் அநுப விக்கவில்லை யென்பது கருத்தன்று. எப்படியிருந்த போதிலும், இந்த ஆனந்தம் இக்த்தை ஒட்டியதன்று; தெய்விக சக்தியோடு ஒன்றுபடுகிறதனுல் ஏற்படுகிற ஆனந்தம் இது. இது காரணமாகவே, மதம் வேண் டாம் என்று சொல்கிறவன்கூட மதமில்லாமல் வாழ முடியாது, வாழவில்லை என்று சொன்னேன்.

## உயிர்நாடி

இனி, அடுத்த விஷயத்திற்குச் செல்கிறேன்; அதாவது பிரார்த்தனை மதத்தின் மிக முக்கியமான பகுதியாயிருப்பதால், மனிதனுடைய வாழ்க்கையின் உயிர்நாடியாக இருக்கிறதென்ற விஷயம். குறையிரத்தல் என்ற முறையிலோ, இன்னும் விரிந்த பொருளில் ஆன்ம ஒருமைப் பாட்டுக்காகவோ பிரார்த்தனை செய்கிறோம். இந்த இரண்டு நிலையிலும் இறுதியில் அடையும் பயன் ஒன்றுதான். குறையிரந்து பிரார்த்தனை செய்யும்போது, அடுக்கடுக்காக ஆன்மாவைச் சூழ்ந்து அதை மூடியுள்ள அறியாமையையும் இருளையும் நீக்கி அதைச் சுத்தம் செய்து புனிதமாக்க வேண்டுமென்ற நோக்கோடு பிரார்த்தனை செய்யவேண்டும். ஆகையால் தம்முள் இருக்கிற தெய்வாம்சம் விழிப்புற வேண்டுமென்ற ஆர்வமுடைய ஒவ்வொருவரும் பிரார்த்தனை செய்தே ஆகவேண்டும். சொற்களை உச்சரிப்பது கேட்பது என்பது மட்டும் பிரார்த்தனையாகாது; வெறும் சொல்லடுக்குகளைத் திருப்பிச் சொல்வதும் பிரார்த்தனையாகிவிடாது. ஆன்மாவிலே கிளர்ச்சி ஏற்படவில்லை என்றால், ராமாயணத்தை எத்தனை தரம்தான் திருப்பித்திருப்பி செபித்தாலும் அதனால் ஒரு பயனும் இல்லை. பிரார்த்தனையிலே, இதய நெகிழ்ச்சியில்லாமல் சொற்களைச் சொல்வதைவிட, சொற்களில்லாமல் இதயநெகிழ்ச்சி பெறுவது எவ்வளவோ சிறப்புடையது. பிரார்த்தனை

செய்யவேண்டுமென்று உள்ளத்திலே ஒரு தவிப்பு ஏற்பட்டு, அதைப் பூர்த்தி செய்யும் முறையில் அது அமையவேண்டும். பசியெடுத்தவன் நல்ல ஆகாரம் கிடைத்தவுடன் அதை எவ்வளவு சுவையோடு உண் கிருனே அதேபோல, ஆன்மத் தவிப்பெடுத்த உயி ரானது இதய பூர்வமாகச் செய்கிற பிரார்த்தனையில் ஈடுபடுகிறது. அதிலுள்ள மந்திர சக்தியை அனுப வித்தோர் நாட்கணக்காக உணவில்லாமல் இருக்க முடியும்; ஆனல் பிரார்த்தனை செய்யாமல் அவர் களால் ஒரு கணம்கூட இருக்கமுடியாது. என் னுடைய அனுபவத்தையும், என்னுடைய சகாக்களின் அனுபவத்தையும் கொண்டே நான் இதைச் சொல்லு கிறேன். ஏனென்ருல் பிரார்த்தனையில்லையானல், உள்ளத்தில் அமைதியும் இருப்பதில்லை.

## நேரம்

இது உண்மையானல், நமது வாழ்க்கையில் ஒவ் வொரு கணமும் நாம் பிரார்த்தித்துக் கொண்டிருக்க வேண்டுமே என்று சிலர் சொல்லுவார்கள். இதைப் பற்றிச் சிறிதும் சந்தேகம் இல்லை. ஆனல் தவருன நெறியிலே செல்லுகிற மனித வர்க்கத்தைச் சேர்ந்த நமக்கு இதயத்தில் இறைவனேடு ஒன்றி நிற்கும் பொருட்டு வேறு வேலைகளை விட்டு, மனத்தை ஒரு கணமேனும் ஒதுக்குவது இயலாததாயிருக்கிறது. ஆகையால், இறைவனேடு எந்நேரமும் ஒன்றிநிற்பது

நமக்கு அசாத்தியமாகும். அது காரணமாகவே, கொஞ்ச நேரத்திற்காவது உலகப் பற்றுக்களை அகற்றியிருக்க முயலுகிறோம். அதாவது இந்த உடலை மறந்து உள்ளத்தோடு மட்டும் ஒன்றி நிற்கக் கடுமையாக முயல்கிறோம். இப்படி முயலும்போது, இதற்குச் சாதகமாயிருக்கும் பொருட்டு குறிப்பிட்ட சில மணி நேரங்களை பிரார்த்தனைக்கென்று ஒதுக்கி வைக்கிறோம்.

* சூரதாசருடைய கீதத்தை நீங்கள் கேட்டிருப்பீர்கள். பரம்பொருளோடு கலக்கவேண்டும் என்று ஆன்மா படும் தவிப்பை, உணர்ச்சி ததும்ப ஆன்மா கதறுவதை, அந்த கீதம் வெளியிடுகின்றது. அவர் ஒரு சிறந்த அடியார்; ஆனால் அவரோ, தம்மை வெளிப்படையாகப் பாவி என்றே சொல்லிக்கொண்டார். ஆன்ம நெறியிலே நம்மை விட அவர் எவ்வளவோ தூரம் முன்னே சென்றிருந்தார். எனவே இறைவனிடமிருந்து பிரிந்த துக்கத்தை அவரால் சகிக்க முடியவில்லை; கடவுளின் பிரிவாகிய ஆற்றொணுத் துன்பத்தைச் சகிக்க முடியாமல், நம்பிக்கையிழந்து தம்மையே வெறுந்த நிலையில் அவர் அவ்வாறு கதறினர்.

---

* 'என்னிலும் வெறுக்கத்தக்க கொடிய கசடன் யாவன்? என்னைப் படைத்த பரமனை மறந்தேன்; நன்றிகெட்ட பாதகனாய் விட்டேன்!'

## விழித்துக்கொண்டேன்

பிரார்த்தனை எவ்வளவு இன்றி[illegible]மையாதது என்பதைச் சொல்லி, அதன் மூலம் முக்கியமாக அது என்ன என்பதை எடுத்துச் சொன்னேன். நாம் மனிதவர்க்கத்திற்குச் சேவை செய்யப் பிறந்திருக் கிறோம். நன்றாக விழிப்பாயிராவிட்டால் தக்க முறையில் இச்சேவையை நம்மால் புரியமுடியாது. மனிதனுடைய மனதில் இருளுக்கும் ஒளிக்கும் இடையே நிரந்தரமாக ஒரு போராட்டம் நடந்து வருகிறது. பிரார்த்தனை என்ற சிறந்த பாதுகாப்பை நம்பாதவன் இந்தப் போரில் இருளுக்கு அடிமையாகி விடுவான். பிரார்த்தனை செய்பவன் மனச்சாந்தி பெற்று உலகத்தோடு ஒத்து அன்பு பூண்டு வாழ்வான். பிரார்த்தனை செய்யும் இதயமில்லாமலே, லௌகிக விஷயங்களில் ஈடுபடுகிறவன், தன்னையும் துன்பத் திலாழ்த்தி, உலகத்தையும் துன்பத்திலாழ்த்துவான். ஆதலால், இறந்த பிறகு பிரார்த்தனையினால் நன்மை ஏற்படும் என்பது ஒரு புறமிருக்க, இந்த உலகத்தில் வசிக்கும்போதே மனிதனுக்கு அது அளவற்ற உதவி செய்வதாயிருக்கிறது. நாள்தோறும் நாம் செய்கிற செயல்களில் ஒழுங்கையும் அமைதியையும் ஒய்வையும் நிலைபெறச்செய்வதற்கு, பிரார்த்தனை தான் சிறந்த சாதனமாகும். இந்த ஆசிரமவாசிகளாகிய நாம் உண்மையை நாடி, அதன் வழியே நிற்பதென்ற உறுதியோடு இங்கு[illegible]தோம். அப்படி வந்த நாம்,

பிரார்த்தனையினால் சிறந்த பயன் விளையும் என்பதை நம்புவதாகச் சொல்லிக்கொண்டோம். ஆனால் நெடுங் காலம்வரை, அதை முக்கிய விஷயமாகக் கருதாமல் இருந்துவிட்டோம். மற்ற விஷயங்களில் கவனம் செலுத்திய அளவு பிரார்த்தனையில் நாம் கவனம் செலுத்தவில்லை. இந்த உறக்கத்திலிருந்து நான் ஒரு நாள் விழித்துக்கொண்டேன்; இந்த விஷயத்தில் எனது கடமையைச் செய்வதிலே மிகவும் வருந்தத் தக்க முறையில் தவறிவிட்டதாக உணர்ந்தேன். எனவே, இந்த நிலையைச் சீர்த்திருத்தும்பொருட்டு, கடுமையான கட்டுப்பாட்டை எல்லோரும் பின்பற்ற வேண்டுமென்று சொன்னேன். இந்தக் கட்டுப் பாட்டைப் பின்பற்றியதனால் நமது நிலை முன்னைய நிலையைவிடச் சிறப்புடையதாயிருக்கிறதே யொழியக் கெட்டுப்போகவில்லை என்றே நம்புகிறேன். இது வெளிப்படையாகவே தெரிகிறது. பிரதானமான விஷயத்தை முதலில் கவனித்தால், மற்றவை தாமே ஒழுங்குபட்டுவரும். நாற்கோணமான சதுரத்திலே ஒரு கோணத்தை நிமிர்த்திவிட்டால், மற்றக் கோணங்கள் தாமே நிமிர்ந்துவிடும்.

## உருவம்

ஆகையால் தினசரி வாழ்க்கையிலே முதல் வேலையாக இறைவழிபாடு செய்யுங்கள். மாலை வரையில் வழிபாட்டுணர்ச்சி உங்களை விட்டுப்

போகாதபடி இதயபாவத்தோடு அதில் ஈடுபடுங்கள். எவ்விதத் தீய எண்ணங்களும் பயங்கரமான கனவுகளும் இல்லாமல் அமைதியோடு உறங்குவதற்கு அனுகூலமாக, தினசரி, மாலையிலே பிரார்த்தனை செய்து வேலையை முடியுங்கள். அது எந்த உருவத்தில் இருக்க வேண்டுமென்பதைப் பற்றி அதிகக் கவலை வேண்டாம். அது எப்படியாயினும் இருக்கட்டும்; பரம்பொருளோடு நம்மை ஒன்று படுத்தக் கூடிய முறையில் அது இருந்தால் போதும். முறை எப்படியிருந்தபோதிலும், வாயிலிருந்து சொற்கள் வெளிவரும்போது, மனம் அலையாமலிருக்கிறதா வென்பதை மட்டும் கவனத்தோடு பார்த்துக்கொள்ளுங்கள்.

## கட்டுப்பாடு—விடுதலை

நான் சொன்னது உங்கள் மனதில் பதிந்து விட்டால், பிரார்த்தனையில் சிரத்தைகொண்டு, அதை ஒவ்வொரு மாணவனுக்குரிய கட்டாயமான கடமையாகச் செய்யும்படி உங்கள் மாணவரில்லத்தின் மேலதிகாரிகளை நீங்கள் நிர்ப்பந்திப்பீர்கள்; அப்படிக் கட்டாயமானால்தான் உங்களுக்கு அமைதி ஏற்படும். தானாகவே ஏற்படுத்திக் கொள்கிற கட்டுப்பாடு நிர்ப்பந்தமாகாது. ஆன்ம அடக்கமில்லாமல் மனதில் தோன்றுவதையெல்லாம் செய்வது, அதாவது இன்பங்களை நுகர்ந்து சுகமாக வாழ்வது, என்று வைத்துக்

கொள்பவன் ஆசைகளுக்குக் கொத்தடிமையாகிறான்; சில விதிகளையும் கட்டுப்பாடுகளையும் அமைத்துக் கொண்டு அவற்றிற்கு உட்பட்டு ஒழுகுபவனே என்றால், தன்னையே விடுதலை செய்து கொள்கிறான். இந்தப் பிரபஞ்சத்திலுள்ளவை யாவும், சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள் ஆகிய பொருள்களும், சில விதிகளுக்கு அடங்கியே நடக்கின்றன. இந்த விதிகளினால் ஏற்படுகிற கட்டுப்பாடு இல்லாவிட்டால் உலகம் ஒரு கண நேரம் கூட நடைபெறாது. மனித வர்க்கத்துக்குக் சேவை செய்வதையே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்ட நீங்கள், ஏதாவது ஓர் ஒழுங்கை ஏற்படுத்திக் கொள்ளாவிட்டால் சிதறுண்டு போவீர்கள். ஆன்ம நெறியில் கட்டுப்பாட்டுடன் இருப்பதற்கு பிரார்த்தனை மிக்க அவசியமானது. நாமாக ஏற்படுத்திக் கொள்ளும் தடையும் ஒழுங்குமே நம்மை மிருகத்தினின்றும் வேறாக்குகின்றன. நாம் நான்கு கால்களால் நடக்கும் மிருகங்களாயிராமல், நிமிர்ந்து நடக்கும் மனிதர்களாயிருப்பின், இந்த உண்மைகளை யறிந்து, நாமாகவே நமக்குத் தடையையும் கட்டுப்பாட்டையும் ஏற்படுத்திக் கொண்டு ஒழுகுவோமாக.

## பாசுரங்கள் பாடல்களின் அகார வரிசை


| | |
|---|---|
| அங்கிங்கெனாதபடி | 49 |
| அப்பனை | 57 |
| அம்மையே அப்பா | 58 |
| அருட் சோதியே | 18 |
| அன்பே பிரதானம் | 71 |
| அன்றே எந்தன் ஆவியும் | 58 |
| ஆதி பரம்பொருளின் | 52 |
| ஆத்தி சூடி | 45 |
| ஆறு சுடர் | 55 |
| உண்ணும் சோறு | 47 |
| உலகெலாம் | 46 |
| உஜ்ஜயினீ | 66 |
| ஊதுது சங்கே | 67 |
| எத்தனை தரம் | 65 |
| எத்தனை ஜென்மங்கள் | 73 |
| ஏறுமயில் | 67 |
| ஓம் சக்தி | 49 |
| கல்லாப் பிழையும் | 59 |
| கல்லார்க்கும் | 56 |
| கற்பூரம் நாறுமோ | 55 |
| காதலாகிக் கசிந்து | 47 |
| குலந்தரும் | 48 |
| சுண்ணவெண் சந்தனம் | 48 |
| சொல்லும் வைஷ்ணவன் | 21 |
| சொற்றுணை வேதியன் | 47 |
| தன்முகத்துச் சுட்டி | 54 |
| தாயின் மணிக்கொடி | 70 |
| தாயே ஏழைபால் | 64 |
| திருவே என் செல்வமே | 52 |
| துச்சாதனன் எழுந்தே | 60 |
| தேடியுனை | 51 |
| தொண்டு செய் | 72 |
| நளிர்மணி நீருப் | 24 |
| நாடிப் புலங்கள் | 45 |
| நாமார்க்கும் | 59 |
| பகைவனுக் கரு | 63 |
| பாதி மதி நதி | 56 |
| பால் நினைந்தூட் | 48 |
| பித்தந் தெளிய | 62 |
| புழுவாய்ப் பிற | 57 |
| பொழுது புலர் | 46 |
| பொன்னார் மே | 47 |
| மண்ணுலகத்தி | 6 |
| மற்றுப் பற்றெ | 57 |
| மாதர் பிறை | 59 |
| மாற்றறியாத | 58 |
| முருகா, முருக ா | 54 |
| மெய்தான் அரு | 53 |
| வாழிய செந்தப | 66 |
| வாழ்க அந்தண | 9 |
| வாழ்க நீ எம்ம | 66 |
| வைஷ்ணவ ஜ | 19 |
| ஜன கண மன | 38 |
| ஸுஜலாம், ஸ | 22 |

# என் நன்கொடை

டில்லியில் கடைசிப் பிரார்த்தனைக் கூட்டத்தில் மஹாத்மாஜி கூறியதாவது :

"நான் உங்களுக்குத் தந்துபோவது மிகவும் முக்கியமானதாகும். ஒன்று சேர்ந்து பிரார்த்தனை செய்யும் பழக்கமே அது. அந்தப் பழக்கத்தைக் கைவிடாமல் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். பிரார்த்தனைப் பாடல்களைப் பாடாவிட்டாலும் பாதகம் இல்லை. கட்டாயமாக நீங்கள் அனுஷ்டிக்க வேண்டிய பழக்கம் யாதெனில் ஒவ்வொரு குடும்பத்தாரும் தினந்தோறும் வசதியான ஒரு நேரத்தில் ஒன்று சேர்ந்து உட்கார்ந்துகொண்டு உள்ளத்திலுள்ள கடவுளிடத்தில் மனதைப் பதிய வைத்து ஐந்து நிமிஷ நேரமேனும் மௌனமாக இருப்பதே யாகும்."